பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
பெப்ரவரி 2017



## விழிவீச்சில் வலைவீச்சு

கண்களால் படையனுப்பி
காதல்போர் புரிகின்ற
பெண்ணாகப் பிறந்தநல்
பொன்மகளே வென்றிடுவாய்.

கண்களால் காதலனைக்
கைதுசெய்து மனச்சிறையில்
மண்மகளின் துணையோடு
மன்பதையில் வைத்துள்ளாய்.

விழியனுப்பும் வினாவிற்கு
விடையறியாக் காதலனோ
மொழிபேச இயலாமல்
மௌனத்தைக் காத்திட்டான்.

ஐம்புலனின் கண்களையே
அன்றாடம் தூதுவிட்டாய்,
பைம்பொழிலின் தூயவனைப்
பாவைநீ வளைத்துவிட்டாய்.

காதலுக்குப் பச்சைக்கொடி
காட்டுவாய் என்றிருக்க
மோதலுக்கு வரச்சொல்லி
முழுச்சிவப்பைக் காட்டுகின்றாய்.

புன்முறுவல் பூத்துவிட்டால்
போரின்றி அமைதியாகும்,
உன்மனதில் அவனிருக்க
உளத்தில்நிம் மதியாகும்.

**கவிஞர் அ. முத்துசாமி**

www.tamilnenjam.com

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
தோற்றம் 1972
பெப்ரவரி 2017

ஆசிரியர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
ஹிப்ஸுர் ரஹ்மான்
சத்தியபாமா சந்திரன்
அழகுநிலா
சு.பீர்முகமது
ஓவியக்கவிஞர் உமாபதி
'நம் குடும்பம்' ஆ. வர்க்கீஸ்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிதாயினி செந்தாமரைக்கொடி
கவிஞர் கலந்தர் பூமதீன்
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
"பைந்தமிழரசு" பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு.
செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

## புலத்தில்




ஆணிவேரை
அங்கேயே விட்டு விட்டு
வாடவும் முடியாமல்
வளரவும் முடியாமல்
தத்தலித்து தடுமாறுகிறது..!

புலத்தில்
கிளைவேர் பரப்பிய
செடி..!

ஈழபாரதி

## இரவு



சில ஆண்டுகளுக்கு
முன்பு உள்ளதைப்போல்
மகிழ்ச்சிக் குரியதாயில்லை
இந்த நெடிய இரவு!

அதே நிலவு
அதே நட்சத்திரங்கள்
அவற்றில் சில
காணாமல் போயிருக்கவும் கூடும்
அதே வானம்
வேறுவேறு முகில்களின்
இடப் பெயர்வுகளுடன்...

துரித உணவுக் கலாச்சாரத்தில்
கர்ப்பம் தரிக்காதவளின்
ஏக்கத்தையொத்து புழுங்கிக்கிடக்கிறது
பருவம் தவறிய இன்றைக்கான
வானும் மண்ணும்!

தேவையற்று வளர்ந்துகிடக்கும்
புற்றுக் கட்டியைப்போல்
துருத்திக் கொண்டிருக்கிறது - என்
விருப்பத்துக்கு மாறாய்
நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கும்
இன்றைக்கான இரவு!

சுகன்யா ஞானசூரி
யாழ் - ஈழம்

# மரமாகிய நான்

மழையும் மண்ணும் செய்த
கலவியில் முட்டி முளைத்தவன்
சமத்துவ சாதியை வேர்களில்
சுமந்திருப்பேன்
அச்சங்களும உச்சங்களும்
அசைத்துப் பார்க்க முடியாது என்னை
குள்ளநரி கூட்டங்களையும்
ஒதுக்கியதில்லை
அன்பிலணைந்த உயிர்களையும்
விலக்கியதில்லை நான்
கார்பரேட் கலாச்சாரத்திற்கு
பலியானது என் இனம்
உரமிட்ட மண்ணையே
உயிரில்லா பிண்டமாக்கியவர்கள்
எச்சத்தில் பிழைத்து
தானாய் நிமிர்ந்த என்
சுயத்தையா மதித்திடக்கூடும்
நொடிக்கொன்றாய் மனிதம்போல
முகமூடிகளை கழற்றி மாட்டிட
விட்டுவைப்பதில்லை
எங்கள் கைகளை
பண மோப்பம் பிடித்த
பருந்துகளின் கண்கள்
என் இருப்பிடங்களை சமாதியாக்க
வட்டமடிக்கின்றன
நிரந்திரமில்லா கூடுகளும்
கூப்பாடிட்டு உமிழ்கிறது
என் கைகள்
வெட்டப்பட்டிருப்பதை பார்த்து
எதிரிகளைக்
கருவறுக்கும் இனத் தலைவர்கள்
எனக்கும் இருந்திருந்தால்
சமரசத்திற்கே இடமிருந்திருக்காது
என் இனமும் அழிக்கப்பட்டிருக்காது.....!!

# வேஷம்

உன் முகப்பு பக்கத்தில்
எத்தனையாவது
தலைப்பு நான்

முன்னவையும்
பின்னவையும்
என்னிலிருந்து
சற்றேனும்
மாறுபட்டிருக்க வேண்டும்

முந்தயவை அதிகமாக
படிக்கப்பட்டிருக்கலாம்
பின் வருபவை அதிகமாக
படிக்கப்படலாம்

ஆனாலும்
ஒதுக்கிய பக்கங்கள்
என்னையும் சுமக்கிறது
கூரையில் சிதறிய
சோற்றில்
எறும்பிற்கும் பங்குண்டு
என்பதைப்போல....!!



அம்பிகா குமரன்



# ஈழத்தில் பூத்த மலரே ...



குமார் முருகேசன்

உறவே
என் உயிரே
ஈழத்தில் பூத்த மலரே
விதைகளாய் வீழ்ந்து
இடிகளாய் எழுந்து வா....

முத்தம் கொடுக்கும் முகிலே
போர் துடைக்கும் குயிலே
மார் முட்டிக்குடித்த வீரம்
உண்மையென உரைத்து வா.....

தங்கையான நம் உறவின்
கொங்கையாவும் பறித்த
சிங்களவன் சிரங்களை
சிங்கமே நீ பறித்து வா....

எட்டி உதைத்த காள்களை
தொட்டு இழுத்த கரங்களை
பத்தினி மகனே நீ
பட்டென கொய்து வா....

உன் தந்தைக்கூட தொடத்தயங்கும்
அங்கம் யாவும் தொட்டு ரசித்தவன்
குடலை அங்கனவே நீ
இழுத்து குவித்து வா.....

பூக்காத மகளின்
பெண்மை உரசிப்பார்த்த
அவன் ஆண்மையை நீ
அருத்து வா.....

மடி வளர்ந்த உயிர்
மார் தொடும் முன்னே
உதிரமாய் உதிரச்செய்தவன்
உயிரை நீ கொண்று வா....

இட்டது விதையல்ல
இடியென்று
இலங்கையில் நீ
முழங்கி வா

இட்டது விதையல்ல
இடியென்று
இலங்கையில் நீ
முழங்கி வா.....

# தெளிவுகள்



உறையூர் வள்ளி

“என்ன நினக்கிறான்னு! சத்தியமா என்னால யூகம்பண்ண முடியலக்கா” இப்படித்தான் முதன்முதலில் பேசஆரம்பித்தான் பிச்சைமுத்து என்னிடம்.

முகத்தை கவனித்தேன். சிவந்து வீங்கி யிருந்தது. அழுதிருப்பான் போலும். அத்தனை விரக்தி,சலிப்பு அந்தமுகத்தில்.. "சாவும் வர மாட்டேங்குது எனக்கு...”

அழுதுமுடிக்கட்டும் என்று காத்திருந்தேன். வடிகாலுக்கு பின் தெளிவு பிறக்கும். இந்த வீட்டுக்கு குடிவந்து இரண்டுவருடமாக பிச்சை முத்துவிடம் அவ்வளவாக பேசியதில்லை..

கிராமங்களில் புதியஆட்கள் தலைத் தெரிந்தாலே கடைசி தெருக் கோடிவரை தெரிந்து விடும். கேட்காமலே நலம்விசாரிப்பு என்றபெயரில் புதுஆட்களின் விவரங்கள் தெரிந்துக் கொள்வார்கள். தேவையான உதவிகளும் கேட்காமலே செய்துதருவது கிராமத்து இன்றும் வழக்கத்திலிலுள்ளது. அது ஒரு எழுதப்படாதவிதி. கிராமத்து பண்பாடு. நமதான பாரம்பரியம்.

நகரங்களில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து எங்கோ ஓரிடத்தில் உயிர்ப்புடன் தென்படுகிறது. சென்னை வந்த புதிதில் மகன் போட்ட உத்தரவு..

“கதவ சாத்திவை, யாரரவது கூப்பிட்டா உடனே கதவை திறந்துடாதே! அதிகம் பேச வேண்டாம்.. நம்ம ஊர்போல இல்லம்மா கவனமா இரு”!

அப்படித்தான் சிறிதுநாள் பிச்சைமுத்து வீட்டின் உறவு.. காலை பால்வாங்கும்போது சிறியபுன்னைகையுடன் கடந்து செல்வான்.. காலைசென்றால் இரவுதான் பணிமுடித்து எப்போதுவருவான் என்று தெரியாது.. அதிகம் பேசியது சாவி குடுக்கச்சொல்லி,! உங்க வீட்டில் பவர் இருக்கா?என்பதாக இருக்கும்.

இங்கு வந்த மூன்று மாதங்களுக்கு பிறகுதான் பிச்சைக்கு ஒருமகன்,. மகள் இருப்பது தெரியும்.. பிச்சையின் அம்மா மிகவும் வயதானவள்.. தன் வீட்டில் இருப்பதை எங்கள் வீட்டில் அதுக நேரம் இருப்பதை விரும்புவார், வயதானவர்கள் துணையாயிருப்பது எனக்கும் பிடித்திருந்தது.

சமையல் முதல் கை வைத்தியம் வரை பிச்சை அம்மாவிடம் கேட்டால் சரியாய் இருக்கும்.

ரெண்டு வெற்றிலை சூடா தேநீர் போதும் கிழவி தன்கால நாட்டுபுற பாட்டும் கதைகளும் அருவிப்போல் கொட்டத் தொடங்கிவிடும். அதுவும் அழகுடன் இருக்கும்.

மகன்வீட்டில் இருக்கும் நேரம் மட்டும் இந்த பக்கம் வராது பாட்டி. எப்போதும் மகனைப் பற்றியும். தாத்தனைப் பற்றியும் யோசிக்கும் பேசும் பாட்டி. பிச்சைமுத்து நீண்ட வருடங்களுக்கு பிறகு கருப்புசாமிக்கு கடாவெட்டி ஏகப்பட்ட வேண்டுதலுக்கு பிறகு பிறந்தவனாம்.

அந்தம்மா சொல்லும்போதே தாய்மையில் நீர் நிறையும் விழிகள்..

பிச்சைமுத்துக்கு ஊரெல்லாம் பெண்பார்த்து திருமணம் முடித்தார்கள். நாம் ஒரு கணக்குபோட காலத்தின் கணக்கு எப்போதும்வேறுமாதிரி இருக்கும்.. முதலிரவிலே தெரிந்தது மனைவி செல்லிக்கு மனநிலை சரியில்லை எனபது.. செல்லியே இதைச்சொல்லி அழுதபோது ஒன்றும் செய்யமுடியவில்லை..

அம்பைக் குற்றம்சொல்லி புண்ணியமில்லை.. ஆயிரம் உறவுகளுக்கு போய்ச்சொல்லி திருமணம் முடிஎன்பதை! இடைத்தரகு உறவுகள் பொய்சொல்லி பொய்சொல்லி என்று தன்விருப்பம் போல் மாற்றிய கோலத்தில் இந்த திருமணம் நடந்தது பிச்சைக்கோ தெரியாமல் போனதில் யாரைகுற்றம்சொல்ல?

மருந்தின் வீரியத்தில் செல்லி எப்போதும் தூக்கத்தில் இருந்தது.. அவள் சொல்லாமலே உறவுக்களும் வீட்டில்உள்ளோருக்கும் தெரிந்துப் போனது..

ஒருசிறிய போருக்கு தயாரானது வீடு.. அனைவருமாய் சேர்ந்து செல்லியை பிறந்தகம் அனுப்ப முடிவுசெய்தபோது! பிச்சைமுத்து மட்டும் உறுதியாய் இனி நான் பாத்துகிறேன். விட்ருங்க! என சொல்லும்போதே அவன் மனைவி உள்ளுக்குள் பெருங்குரலெடுத்து அழுதஓலம் ஊர்வாயை அடைத்தது..

மருத்துவமனை, மருந்துகள் என வருடம் ஒன்று போனது தெரியவில்லை.. இனி குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம் என மருத்துவர் உறுதிஅளித்த பின்னேதான்! அவளை மனதார நெருங்க முடிந்தது.. கார்த்தி பிறந்தபின் நிறையவே மாறுதல் செல்லியிடம்.

நான்கு வருடம் கழித்து இரண்டாவது குழந்தை சுமதி பிறந்த கொஞ்சநாளில் பெயர் தெரியாத காய்ச்சலில் செல்லி ஒரு இரவு சென்றுசேர!! பித்துபிடித்தது போல் சிலவருடம் பிச்சை அலைந்தான். அப்பாவும் வயோதிகத்தில் காலமானார்..

பிச்சையின் அம்மாவுக்கு! இந்த இரண்டு மரணங்களும் மூன்றுமாத இடைவெளியில் அரங்கேறியது! மனதை, உடலை பலகீனத்தில் தாயைபடுக்கையில் வீழ்த்த!வீட கிட்டத்தட்ட ஒருவெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட இடம் போல்! மகிழ்ச்சியனைத்தையும் துடைத்து சென்றுவிட்டிருந்தது.. உறவுகள் எவ்வளவோ சொல்லியும் பிச்சைமுத்து வேறு திருமணம் செய்துக்கொள்ளவில்லை.

தாய் இல்லாமல் குழந்தைகள் வளர்ப்பதில் உள்ள சிரமம் அனைத்தையும் சந்தித்தே வளர்த்து வந்தான்.. இதில் அலுவலகம் பணிமாற்றம் அரபுநாடுக்கு செல்லபணித்தது.

இதில் பிள்ளைகளின் நிலைத்தான் பெரும் வேதனையாக இருந்தது.. ஊரிலேயே விடுதிவசதி உள்ள பள்ளியில் பிள்ளைகளை சேர்த்துவிட்டான்.. தாயை கவனிக்க உறவுக்கார பெண்ணை உதவிக்குவைத்து புறப்பட்டுச் சென்றான்.

பத்து வருடம் போனது தெரியவில்லை.. அவ்வப்போது போனிலும் நேரடி காணொளி யிலும்! பிள்ளைகளுடன் பொழுது போயிற்று.. இரண்டு வருடம் ஒரு முறை இரண்டு மாதவிடுமுறையின் ஊர் திரும்பும் பிச்சைக்கு.. அறுபதுநாளும் திருவிழாதான்.. இந்தவருடம் பத்தாவது முடித்துதிரும்பும் மகனையும், சொந்தநாட்டிலேயே பணிமாற்றத்துடன் பிச்சை யின் இல்லம் அவர்களை வரவேற்றது..

பிச்சையின்தாய்க்கு நிறையவே மகிழ்ச்சி வீடுநிறைந்ததில்.. அப்பா பிள்ளைக்கு உறவு தேர்வுமுடிவுகள் வரும்வரை சிறப்பாகத்தான் இருந்தது.. பிச்சைமுத்துவிடம் நிறைய எதிர் பார்ப்பு பிள்ளையிடமிருந்து!

இயல்பாக அணைத்து தகப்பன்களுக்கும் உண்டானதுதான்..

அடிப்படை மதிப்பெண்களுடன் கார்த்தி வெற்றி பெற்றதை பிச்சையால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.. முதன்முதலில் அப்பாவின் உக்கிரமுகத்தை, தெறிக்கும் அனலை அன்றுதான் காண்கிறான் கார்த்தி.. முதல் ஒருவாரம் தினம் திட்டு.வெளியில் செல்ல அனுமதிஇல்லை. சிறப்பு வகுப்புகளுக்கு சேர்த்தாகிவிட்டது..

இவை எதுவும் கார்த்திக்கு சிறைபோலவே இருந்தது.. பதினொன்றாம் வகுப்புக்கு விண் ணப்பம் வாங்கிவந்த அன்றுதான் முதலில் எதிர்த்துபேசதொடங்கினான்..

“எனக்கு தொழிற்படிப்பில் சேருங்கள், எனக்கு அதில்தான் விருப்பம்..” வந்ததே கோபம் பிச்சைக்கு!!

“என்னை எல்லோரும் என்னடா சொல் வாங்க. பையன் சரியா படிக்கல போல ன்னு கேவலமா பேசமாட்டாங்க.. நீ இதைபடி.! பிறகு மருத்துவம் சேர். அப்போதான் எனக்கு கௌரவம். என்ன சொல்ல!! ”

அன்றுதான் முதன்முதலில் மகனை கைநீட்டி அடித்தான்.

பக்கத்தில் இருந்த எனக்கு சத்தம் கேட்டு ஓடிச்சென்று பார்த்தேன். கன்னம் முதுகு எல்லாம் வீங்கிஇன்னும் கோபம் தீராமல் அடித்துக்கொண்டிருந்தான் பிச்சை..

விடுங்க பிள்ளையை ன்னு .என் வீட்டுக்கு கூட்டிவந்து கொஞ்சம் ஆசுவாசம் ஆனபின் தேநீர் குடுத்து பக்கத்தில் அமர்ந்து.

“கார்த்தி என்னடா இப்படிபண்ற” இந்த வார்த்தைக் கேட்டதும் திரும்பிபார்த்த பார்வையில். “நீங்களுமா?” என்று கேட்பது போலிருந்தது..

“சரி சரி விடு அப்பாதானே! என்னன்னு சொல்லு நான் வேணும்னா அப்பா கிட்ட பேசறேன்..”

“எனக்கு பிடிக்கலை அத்தை.. படிக்க கஷ்டமா இருக்கு. பாலிடெக்னிக்முடுச்சு பி.ஈ சேர்ந்துக்கிறேன்.. ப்ளீஸ் அத்த அப்பாகிட்ட சொல்லி என்ன சேர்த்து விடுங்க”. ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.. இந்த வயது பிள்ளைகள் நிறைய சிந்திக்கஆரம்பித்து விட்டார்கள்.. என் காலம் போல் இல்லை.. படிக்கவைத்தால் போதும் என்று இருந்தவள் நான்..

பிச்சையின் வீட்டில் பிச்சைஅழுவது தெரிந்தது. கிழவி சமாதானம் செய்துக் கொண்டிருந்தாள். அடி மகனுக்கு! வலி உனக்கா? என்று நினைத்தபடி உள்ளே நுழைந்தேன்.. “வாங்கம்மா” என்றான். “என்மரியாதை எல்லாம் போகப்போகுது இவனால பாத்தீங்க இல்ல எப்படி எதிர்த்துபேசறான்”.

“என்ன நினக்கிறான்னு! சத்தியமா என்னால யூகம் பண்ண முடியலம்மா” இப்படித்தான் முதன்

## சங்கே முழங்கு!



**கள்ளாட்சிக் கொண்டு களவாண்டோர் செய்திட்ட**
**முள்ளாட்சி நீங்க முனைந்தொன்றாய் - வெள்ளாவி**
**வைத்து வெளுப்பாக்க வேண்டுமென்ற பாட்டினைஇ**
**சைத்திங்கு சங்கே முழங்கு.**

**நெல்லாட்சிக் கொண்டு நிமிர்ந்த நிலமெங்கும்**
**புல்லாட்சிச் செய்யும் புதுக்கோலம் - இல்லாமல்**
**செய்து எழிலாய் செழித்தோங்கும் நெல்வயல்**
**வைத்திடச் சங்கே முழங்கு.**

**சொற்பஞ்ச மென்று சொதப்புதற்கு ஆங்கிலத்தைக்**
**கற்றே தமிழ்மொழி கொண்டுள்ள - நற்சுவை**
**கொன்று புதைக்காமல் கூட்டும் புதுச்சொல்லால்**
**ஒன்றிணைக்க சங்கே முழங்கு.**

**மெய்யன் நடராஜ்**

முதலில் பேச ஆரம்பித்தான் பிச்சைமுத்து.

“கொஞ்சம் பொறுமையா யோசிங்க தம்பி, இது நம்ம காலம் இல்ல. இப்போபிள்ளைகளுக்கு எல்லாம் தெரியுது. இணையதளம் நண்பர்கள் உலக அளவில் கால்பரத்திட்டு நிக்கிறாங்க. எது தனக்கு தேவை என்பதை தைரியமா சொல்லும் துணிச்சல் இருக்கு.. கார்த்தி விருப்பம் இது என்றால் விட்டுக்குடுங்க..

நீங்களோ நானோ அவன் கைய புடுச்சு எழுதமுடியாது.. அவன் எழுத்துக்களை அவன் எழுத ஆசைப்படுறான். விட்டுக்குடுங்க நீங்க.. கனமான சுவர் எழுப்பியபிறகு உடைக்கிறது ரொம்ப கஷ்டம்”.

“உங்களுக்கு உங்கபுள்ளைதான் முக்கியமே தவிர, ஊர் என்ன சொல்லும் உறவுகள் என்ன சொல்லும் என்று இருந்தால்! மகன் சொல்வது உங்களுக்கு எப்போர்த்தும் கேட்காமல் போய்விடும். கௌரவம் மனசுல இருக்குங்க..அந்த மனச கார்த்தி கிட்ட குடுங்க. அவன் பத்திரமா நிறைய அன்போட திருப்பித்தருவான்.. இது அவனோட வாழ்க்கை.. அவனோட தேடல்.. அவனோட ஆடுகளம்.. அதில் அவனை ஆடவிடுங்க!”

“வெற்றி, தோல்வி அவன் எதிர்கொள்ளட்டும். கலந்துக்கிறதுக்கு மட்டும் இப்போ நீங்க அனுமதி கொடுங்க பிச்சைமுத்து”.

“கண்டிப்பா கார்த்தி வாழ்க்கையில் முன் னேறுவான்.. அவனோட சொந்த முயற்சில்.. அவனுக்குன்னு இப்போதைக்கு நீங்க செய்யவேண்டியது ஒன்னே ஒண்ணுதான்”.

“உந்துதல் ஆசீர்வாதம் நம்பிக்கை. நம்புங்க கார்த்திய. இதுக்கு மேல உங்க விருப்பம் போல செய்ங்க பிச்சைமுத்து”.

மறுநாள் பிச்சையின் முகத்தில் ஒரு தெளிவு..

அவனுக்கு பின்னாடி இருந்து புன்னகையுடன் பெருவிரலை உயர்த்தி சைகை செய்கிறான் கார்த்தி. ■



# மெல்லின மங்கை

காதில் கலாச்சாரம்
அணிந்த கட்டழகி
இவள் காதணி
துளையின் நீளம்
சொல்லும் இவள்
வாழ்வின் நீளம்
இவள் மூக்குத்தி
பேசும் முந்நூறு கதைகளை
கொப்பும் கிளையுமாய்
குடும்பம் தழைக்க
கொப்பு அணிந்த
கொண்டைக்காரி
துளையிட்டு மருத்துவத்தை
நகை போட்டு
நமக்குச் சொல்லும்
நாட்டுப்புற நாயகி
அணிகலனில் அறிவியலின்
சூட்சுமம் அறிந்த
தங்கத் தமிழச்சியே...
உன் தலைமுறையோடு
முடிந்துவிடுமா
நம் பார் போற்றும்
பாரம்பரியம்?
மெது மெதுவாய்
பாரம் சுமந்து,
வாழ்வை அறுந்துவிடாமல்
தாங்கிப் பிடிக்கும்
வாழ்வியல் வித்தைக்காரியே
நீ அறிந்த
அற்புதத் தத்துவத்தை
மெல்லின மங்கையர்க்கு
தாரை வார்த்துத் தந்துவிடு



தேன்மொழி தேவி



# இன்றைய உலகில் தடுமாறும் இளையோர்

**S.ஜெர்லின் பிரீமா**



19 வயது முதல் 35 வயது வரை உள்ள அனைவருமே இளையோர் தான். அது மட்டுமல்லாமல்; துடிப்புடன், பயம் என்பதே இல்லாமல் பல எதிர்ப்புகளையும் தாண்டி முழு ஆற்றலுடன் எந்த ஒரு செயலையும் செய்து முடிப்பவன் இளைஞன். இத்தகைய மனபலத்தையும் ஆற்றலையும் படைத்த இளைஞன் இன்று தன்னை அறியாமலேயே நாகரிகம், ஃபேஷன், வாழ்க்கை சூழ்நிலை போன்ற காரணங்களால் தன்னையே அழித்து, தன் வாழ்வையே கேள்விக்குறியான ஒன்றாக மாற்றி வருகின்றான்.

**இளைஞன் தடுமாறும் சூழல்:**

இளம் வயது புதிய மாற்றம் ஏற்படும் காலம், பொதுவாக மன அழுத்தமும், கவலையும் நிறைந்த காலம் என ஐக்கிய நாடுகளின் ஓர் அறிக்கை விவரிக்கிறது. இளைஞர்களால் பொதுவாக மன அழுத்தத்தையும், கவலையையும் ஆக்க பூர்வமான விதத்தில் சமாளிக்க முடிவதில்லை. அதற்கான அனுபவம் அவர்களிடம் சிறிதும் இருப்பதில்லை. இந்த நேரங்களில் சரியான வழிநடத்துதல் இல்லை என்றால் இளைஞர்கள் எளிதாக தீய வழிதனில் சென்று விடுவார்கள்.

**குடும்ப சூழ்நிலை காரணம்:**

“பல குழந்தைகள் இருக்கிறார்கள் ஆனால், எல்லாக் குழந்தைகளுக்கும் நல்ல தாயும் தந்தையும் கிடைப்பதில்லை” என்று திருத்தந்தை 23ம் அருளப்பர் கூறுகிறார். கடந்த 30 ஆண்டுகளாகத் தோன்றியிருக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள் கூட இன்று கட்டுப்படுத்த முடியாத இளைஞர்களையே தோற்றுவிக்கிறது என்று டாக்டர் ராபர்ட் ஷா கூறுகிறார்.

தாய், தந்தையிடையே நடக்கும் சண்டைகள் கூட குழந்தைகளை, இளைஞர்களை பாதிக்கிறது. உதாரணமாக அமெரிக்க குழந்தைகளில் 3 பங்குக்கும் அதிகமானோர் 18 வயதினை எட்டுவதற்கு முன்பே பொற்றோரின் விவகாரத்தால் பாதிக்கப்படுகின்றனர் என ஜர்னல் ஆஃப் இன்ஸ்ட்ரக்'னல் சைக்காலஜி என்ற பத்திரிகை அறிக்கை செய்கிறது. மேற்கத்திய நாடுகளும் இது போன்ற புள்ளி விவரங்களை வெளியிடுகின்றன. இப்படி பெற்றோரின் கண்காணிப்பு இல்லாமல் வளரும் பிள்ளைகள் பெரும்பாலும் தனிமையை அனுபவிக்கிறார்கள், பிரச்சனையை விலைக்

கொடுத்தே வாங்குகிறார்கள்.

**வரம்புகள் இல்லாதது:**

தெளிவான வரம்புகள் இல்லாதது இளம் குற்றவாளிகள் தோன்றுவதற்கு காரணமாக அமையலாம். “தான் கஷ்ட்டப்பட்டதைப் போன்று தன் பிள்ளையும் எந்த கஷ்ட்டத்தையும் அனுபவிக்கக் கூடாது” என்பதற்காக ‘கூடாது’ என்ற வார்த்தைக்கே இடமில்லாமல் எவ்வித வரம்புகளும் வைக்காமல் அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுத்து இன்று வளர்க்கப்படும் பிள்ளைகள் “‘மற்றவர்களுக்கும் வாழ்க்கையும், உணர்ச்சிகளும், தேவைகளும், விருப்பங்களும் உண்டு என்பதை உணர வாய்ப்பில்லை’ ‘மற்றவர் இடத்தில் தன்னை வைத்து பார்க்கத் தெரியாத எந்த பிள்ளையாலும் அன்பு காட்டவும் முடியாது’”. அது மட்டுமல்லாமல் கண்டிப்பு இல்லாமல் வளர்க்கப்படும் பிள்ளைகள் சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்துக் கொள்வது மிகக் கடினம் என்பதை பெற்றோர்கள் உணருவது இல்லை.

**இணையமும் இளையோரும்:**

பெரும்பாலான இளைஞர்கள் facebook, WhatsApp போன்ற சமூக வலை தளங்களுக்கு அடிமையாக மாறி தன் வாழ்வையே அழித்து வருகிறார்கள். 2004ம் ஆண்டு துவங்கப்பட்ட facebook என்கிற சமூக வலை தளம் இன்று 800 மில்லியனுக்கும் அதிகமான பயனாளர்களை கொண்டு இயங்கி வருகிறது. இதன் நிறுவனர் Mark Zuckerberg அவர்கள் உரையாற்றுகையில் இந்த சமூக வலை தளத்தின் மூலம் இளைய சமுதாயத்தின் மறுமலர்ச்சியையும், எழுச்சியையும் மிக விரைவில் உலகமெங்கும் காண முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார். ஆனால், இது போன்ற சமூக வலைதளங்களின் வீரியவேர்கள் உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று தன் பாதையை அமைத்துக் கொள்ளும் என்று அன்றைய தினம் யாரும் அறிந்திருக்கவில்லை. நம் இளைஞர் சமுதாயம் அறிவார்ந்த விஷயங்களை பகிர்ந்துக் கொள்வதில் எந்த தவறும் கிடையாது. அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல எந்த ஒரு பழக்கமும் நம்மை ஆளாமல் நாம் தான் அதனை ஆள வேண்டும் என்பதை அறியாத இளைஞர்களாய் தன் வாழ்வின் பெரும் பகுதியை facebook, WhatsApp நண்பர்களுடன் chating செய்வதிலேயே கழித்து விடுகின்றனர். இது இன்றைய இளைஞர்களின் பொழுதுபோக்காகவும் மாறியிருக்கிறது.

**ஆடம்பரத்தை நாடும் இளையோர்:**

உழைத்து சேர்த்த பொருளை யாருக்கும் செலவிடாமல் சேர்த்து வைக்கத் தெரிந்த தலைமுறை அதை என்ன செய்வது என்று தெரியாது இருந்த நேரத்தில் தான் மேலை நாட்டு கலாச்சாரம் நம் இளையோர் மத்தியில் ஊடுருவ ஆரம்பித்தது. அந்த நேரத்தில் தான் “தான் வாழ பிறரையும் வாழ விட வேண்டும் என்ற சிந்தனையை மறந்து சம்பாதித்த பொருளை நல்ல வழிதனில் செலவழிக்க வேண்டும் என்ற மனதுடன் கூடிய மனிதாபிமானம் இல்லாத” இளைஞர்கள் உருவாக்கப்பட்டனர்.



ஆடம்பரமாக சுயநலத்துடன் கூடிய வாழ்க்கை வாழ்ந்த இளைஞர்கள் தங்கள் சேமிப்பை இழந்தார்கள்.

### Treet என்னும் பெயரில் மது:

தமிழகத்தில் மது அருந்துவோரின் சராசரி வயது 13 என்கிறது ஒரு புள்ளி விவரம்.


இன்றைக்கு திருமணத்திற்கு மது, இறப்புக்கு மது என இன்றை இளையோர்கள் தன்னுடைய வாழ்வில் நல்லது அல்லது கெட்டது என எது நடந்தாலும் தானும் மது அருந்தி தன் நண்பர்களுக்கும் Treet (மது) வைப்பது இன்றைக்கு ஃபேஷனாக மாறிவிட்டது. Treet என்னும் பெயரில் சின்னதாக அன்றைய தின மகிழ்ச்சியை அனுபவிக்க அல்லது துக்கத்தை மறக்க என அவர்கள் ஆரம்பிக்கும் மது பழக்கமானது நாளை தன் வாழ்வையே அழித்து விடும் என்பதை அறியாத இளைஞர்களாய் பெரும்பாலான இளைஞர்கள் மதுவை தன் வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றி வருகின்றான்.

உலக சுகாதர மையம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின் படி 2 பில்லியன் மக்கள் மது பழக்கம் உடையவர்கள் எனவும், 75 மில்லியனுக்கு மேற்ப்பட்டோர் மது பழக்கத்தால் ஏற்பட்ட உடல் நோய்களால் அவதிப்படுகின்றனர். உலகம் முழுவதும் ஆண்டுதோறும் சுமார் 2.5 கோடி பேர் மது காரணமான நோய்களால் இறக்கின்றனர். 15 முதல் 29 வயதுக்கு உட்பட்டோரில் 9% பேரின் இறப்புக்கு மதுவே காரணமாக அமைகிறது. கடந்த 30 ஆண்டுகாலமாக வளர்ந்து வரும் நாடுகளில் குறைந்து வரும் நிலையில் இந்தியாவைப் போன்ற வளரும் நாடுகளில் அது அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்தியாவில் 1950களில் 23ஆக இருந்த மது அருந்துவோரின் வயது 1990களில் 19ஆக குறைந்து இன்று 13ஆக குறைந்துள்ளது.

இளைஞனே! நீ எதற்காக விளக்கில் விழும் விட்டில் பூச்சியாய் நீ உன் வாழ்வையே அழிக்கின்றாய். நீ சாதிக்க பிறந்தவன், உன் வாழ்க்கை உன் கையில், வாழ்வில் வரும் தடுமாற்றம் மாற்றத்தை விளைவிக்கும். பார்த்து பார்த்து அடி வைக்க இது பூக்கள் நிறைந்த பாதை(உலகம்) அல்ல, மாறாக முட்கள், வலிகள், சோதனைகள் அடங்கிய பாதை. இந்த பாதையை கடக்கும் சக்தி இளைஞனே உனக்கு உண்டு. இவ்வுலகில் உன் இலட்சியத்தில் தடுமாற்றம் இல்லாமல் போராடு வெற்றி நிச்சயம்.

**சிந்தித்து செயல்படு!**
**இவ்வுலகு வியக்கட்டும் உன்னைக் கண்டு!**

## சின்ன... சின்ன...



- முகம் பார்க்கும்
  கண்ணாடிகளிலெல்லாம்
  நீயே தெரிகிறாய் ??

- வாழும் கடவுளை
  வீதியில்
  விட்டு விட்டு
  கோவிலில் தேடுகிறான்
  'இல்லாத கடவுளை'

- பத்து நிமிட சுகம்
  பரிசளிக்கும் நரகம் - அப்
  பாவியாய்
  பாழும் பூமியில்
  அனாதை தெய்வங்கள் !!!

- ஒரு தேநீர் கோப்பையில்
  மூழ்கி
  காதல் செய்கிறது
  மனது !!!

- வரதட்சணை ...
  எந்த ராமனும்
  வில் உடைக்க
  வர வில்லை ..
  காத்திருக்கிறாள்
  கலிகாலத்துச் சீதை
  முதிர் கன்னியாய் !!

- நௌஷாத் கான் .லி






கவிஞர் ஈழபாரதி

நாம் கவனிக்கத் தவறிய, இயந்திர வாழ்க்கையில் நாம் இழந்த கிராமத்து வாழ்வியல் முறைகளை மண் வாசனையோடு தந்து இருக்கிறார் "காட்டு நெறிஞ்சி" யில் கவிஞர் சோலச்சி.

முதல் பரிசு என்ற சிறுகதை நூலின் மூலம் அறிமுகமான சோலச்சியின் இரண்டாவதுப் படைப்பாக வெளிவந்துள்ளது இந்த "காட்டு நெறிஞ்சி".

கவிதை என்றாலே காதலைப் புறம் தள்ளிவிட்டு எழுதிவிட முடியாது. காரணம் காதல்தான் அவனின் முதல் கவிதை.

எங்குப் பார்த்தாலும்
எழுதிவிட்டுத்தான்
செல்கிறேன்
என்னோடு
உன் பெயரையும்
கள்ளிச் செடிகளில் !

எல்லோருக்கும் வாய்த்திருக்கும் கிராமங்களில் கள்ளிச் செடிகளில் ரணமான காதல் முள்ளினால் குத்திய வடுக்களால் இதயத்தின் ஆறாத வலிகளால் இன்னும் அப்படியே பதியப்பட்டு இறக்கிறது கள்ளிச் செடிகளில் காதல்.

அயர்ந்து உறங்கினேன்
ஆடை இழந்த மரத்தின்
அடியில்
பூமி சிம்மாசனத்திற்குக்
குடை பிடித்தவாறு
காளான்கள்!

வெப்பமயமாகிவரும் பூமியில், இனி என்ன மிச்சம் இருக்கப்போகிறது? என்ற ஆசிரியரின் கோபம்தான் கவிதையாக படிந்து இருக்கிறது.


கிராமத்து வயல்கள், குளங்கள், ஆறுகள் காணாமல் போய்விட்டன. மணல் இன்று அதிகாரவர்க்கத்தின் சுரண்டலாக மாறிவிட்டது. தனியார் மயமாக்கலால் கானாமல் போனது கிராமத்து வயல்கள் மட்டுமல்ல நம் தலைமுறை பிள்ளைகளின வளங்களும்தான்.

என் இனம்
அழிந்தலைத் தடுக்கத்
துப்பில்லை

தேசிய கீதம்
ஒரு கேடா...!

கிராம வாழ்வியலை முன் வைத்து நிறைய கவிதைகள் இத் தொகுப்பில் இடம் பெற்றிருந்தாலும், ஈழம் சார்ந்தும் கவிதைகள் இத்தொகுப்பில் காணக் கூடியதாக இருக்கின்றது. இருந்தாலும் இப்படிக் கேட்பதற்கு ஒரு துணிச்சல் வேண்டும்.

இந்திய இறையாண்மை மீறி எப்படி பேசலாம், எப்படி எழுதலாம் என்ற எல்லாக் கேள்விகளுக்கும் ஒரு பதில் வைத்திருக்கிறார். ஒரு இனம் கொத்துக் கொத்தாக நம் கண்முன்னே செத்து வீழ்ந்துக் கிடக்கிறது, இந்நூற்றாண்டில் நடைபெற்ற பாரீய மனித பேரவலம் ஈழத்தில், நடந்தேறிய பிறகும், ஆட்சி அதிகாரங்களுள்ள சரிவதேசங்கள் கேட்கவில்லையே என்ற ஆதங்கம் கவிஞரின் கவிதைகளில் அனலாய் எரிகின்றது.




எவ்வளவு உழைத்தாலும்
உழவுக்கு
கூலியாய்க் கிடைப்பது
வறுமை மட்டுமே!

சேற்றை
புறம் தள்ளிவிட்டு
சோற்றை மட்டுமே
ருசிக்கின்றார்கள்
சுகவாசிகள்!

இப்படி இன்னும் கவிதைகள் நிறைந்து இருக்கின்றது. கவிஞர் சோலச்சியின் தொகுப்புகள் முழுவதும் தமிழின அழிப்புக்கு எதிராக, முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக, சாதி, அடக்கு / ஒழுங்கு முறைகளுக்கு எதிரான, போர்த்தொடுத்து இருக்கிறார் கவிதைகளில் கவிமதி சோலச்சி.

காணாமல் போன கிராமத்து வயல்களுக்காக, உழவுக்காக, மாடுகளுக்காக, ஆற்றுமணல் பருக்கைகளுக்காக, ஈழத்திற்கான ஆதரவாக ஒரு கிராமத்துக் குரலாய் ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது காட்டு நெறிஞ்சி.

எல்லாவற்றையும்பேசும் கவிதையாக காட்சிப்படுத்தி அழகிய வடிவமைப்பில் வெளிவந்திருக்கும் கவிமதி சோலச்சியின் கவிதைகள் இலக்கியத் தளத்தின் மக்களின் வாழ்வியல் படைப்பாகும்.

14x21,5 cm அளவில் 128 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை: 110 INR

தொடர்புகளுக்கு மின்னஞ்சல் : nandavanam10@gmail.com





# இலக்கு

## பட்டுக்கோட்டை ராஜா

இறகுப்பந்தாய் விருட்டென்று வீட்டுக்குள் நுழைந்த காவ்யா, ``அப்பா, ரகுநாதன் தாத்தா தெருமுனைல வந்திட்டிருக்கார்... அநேகமா அவர் உங்களைப் பார்க்கத்தான் வருவார்னு நெனைக்கிறேன்... உங்களைக் காப்பாற்றலாம்னு ஓடிவந்தேன்... எஸ்கேப் ஆய்டுங்க.. நீங்க வெளியில் போய்ட்டீங்கன்னு அவர்கிட்ட சொல்லிடுறேன்!' 'என்றாள்.

``பெரியவங்களை அப்படியெல்லாம் அலட்சியப்படுத்தக் கூடாதும்மா...! அவருக்கு நம்பளைவிட்டா வேறு யார் இருக்காங்க?"

``விதி வலியது.. அதை யாரும் வெல்ல முடியாது!" காவ்யா கிண்டலாய்ப் பாடிக் காட்டிவிட்டு நகர்ந்தாள்.

ரகுநாதன், எனது அப்பாவின் நண்பர். தாசில்தாராய்ப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். மிகச்சிறந்த எழுத்தாளர் என்பது கூடுதல் தகுதி. பிரம்மச்சர்யத்தைக் கடைப்பிடிக்காத பிரம்மச்சாரி. திருமணம் செய்து கொள்ளவில்லையே தவிர பெண்சுகம் காணாதவர் என்று சொல்லமுடியாது. ஊரறியாமல் பல பெண்களுடன் அவருக்குத் தொடர்பு இருந்தது எனக்குத் தெரியும். அவரது எழுத்துவன்மை பெண்களைச் சுலபத்தில் வசியம் செய்துவிடும். பின்னங்கழுத்துக்குக் கீழே தொங்கும் தலைமுடி, ஆண்மையைச் சொல்லும் முறுக்கு மீசை, சிகப்புத் தோல் என்று ரகுநாதன் அழகாகவே இருப்பார்.

`விரும்பி வர்றவகிட்ட வேணாம்னு சொல்லிட்டு ஒதுங்கினால் நம்பளைப் பெட்டைன்னு நெனச்சிடுவாளுகய்யா... யார் குடும்பத்தையும் நான் கெடுக்கலை... நானா விரும்பி யார்கிட்டேயும் போறதில்லை... தானாவிரும்பி வர்றதை நான் விட்டதுமில்லை.!' என்று தன் தவறை நியாயப் படுத்துவார்.

அதற்குமேலாய், `பாண்டியன், எனக்குப் பெரிசா உறவுன்னு சொல்லிக்க யாரும் கிடையாது... நான் செத்துப்போனா நீதான்யா எனக்குக் கொள்ளி வைக்கணும்... செலவைப்பற்றிக் கவலைப் படாதே... என்னோட வங்கிக் கணக்குல உன்னைத்தான் நாமினியா போட்டிருக்கேன்!' என்றும் அடிக்கடி சொல்லுவார்.

`இப்படிச் சொல்றவங்களுக்குச் சாவே கிடையாது சார்!'

`சாகாவரம் பெற்ற மனிதப்பிறவின்னு யாரும் கிடையாதுய்யா... நீ முந்தியாநான் முந்தியாங்கிற சூட்சுமம் வேணா நமக்குப்

புரியாதிருக்கலாம்.. எல்லோருக்குமே மேலோகப் பயணத்துக்கு டிக்கெட் எப்பவோ ஆண்டவன் ரிசர்வ் பண்ணிட்டான்!' என்பார்.

கவிதைத் தொகுப்பொன்று நான் வெளியிட்டதை எப்படியோ தெரிந்து கொண்டார். `இலக்கியம் பேசலாம்யா'என்று அடிக்கடி வீட்டுக்குவந்து என் வேலைகளைக் கெடுத்து வைப்பார்.

பெரியமனிதர். பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல்தானே என்னைத் தேடி வருகிறார் என்று நான் பொறுமை காப்பேன்.

ஆனால் என் மனைவி மகளுக்கு அவரைப் பிடிக்காது. காவ்யா அவருக்கு `அணுகுண்டு' என்று பெயர் வைத்திருக்கிறாள். காரணம், அவர் எப்போது எங்கள் வீட்டுக்கு வந்தாலும் அவர் பொருட்டோ அவர் சொல்லிய கருத்தின் பொருட்டோ எனக்கும் வசந்திக்கும் சண்டை வெடிக்கும்.

வாசலில் அவர் தலையைப் பார்த்ததும், ``வந்துடுச்சி வில்லங்கம்..... மாமா நல்ல மனுசர், சீக்கிரம் செத்துட்டாரு.. ஆண்டவன் இந்த வில்லங்கத்தை மட்டும் எதுக்காக இன்னும் விட்டுவச்சிருக்கான்னு தெரியலை... நேரம்விழுங்கிகளிடம் தூரம் இருக்கட்டும்னு சொன்னா உங்களுக்கும் புரியலை!" முணுமுணுத்தபடியே வசந்தி அடுக்களைக்கு நகர்ந்தாள்.

அவரைப் பார்த்ததுமே நான் வீட்டுக்கு எடுத்து வந்திருந்த அலுவலகக் கோப்பை மூடிக் கட்டிவிட்டு, ``வாங்க சார்.." என்றேன்.

`இலக்கியம் பேசலாம்னு வந்தேன்யா... உன் வேலையைக் கெடுக்கிறேன்னு தப்பா எடுத்துக்காதே!' என்று எப்போதும் கலகலப்பாய்ப் பேசியபடியே நுழைகிற ரகுநாதன் இன்று அமைதியாய் நாற்காலியில் வந்து உட்கார்ந்தார். மூச்சிரைத்தார்.

அவருக்கு எல்லா கெட்டப் பழக்கங்களும் உண்டு. இப்போதும் அவரிடமிருந்து வித்தியாசமான தொரு வாடை வந்தது. கண்கள் சிவந்திருந்தன. கடிவாளமில்லாத குதிரைஇலக்கில்லாத பயணம். யார் கட்டுப் படுத்துவது?

``என்னசார், ஏதாவது முக்கியமான செய்தியா?" என்று கேட்டேன்.

ரகுநாதன் குனிந்திருந்த தலை நிமிர்த்தி நேராய் என்னைப் பார்த்தார். இயல்பான முகமில்லை. மனசு காயப்பட்டிருப்பதை அவரது முகம் எனக்கு உணர்த்தியது. ``கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்னோட தீவிரமான ரசிகைன்னு சொல்லிக்கிட்டு ஓர் இளம்பெண் என் வீட்டுக்கு வந்தா பாண்டியன்..." மூச்சுவாங்கியபடியே சொல்லத் தொடங்கினார்...

⁂ ⁂ ⁂

`இத்தனை நாளா உங்களைப் பார்க்கணும்னு நான் துடிச்சிட்டிருந்தேன் சார்... இன்னிக்குதான் உங்க முகவரியைக் கண்டுபிடிச்சி வரமுடிஞ்சது...!' வந்து உட்கார்ந்ததுமே ஆர்வத்தோடு குறிப்பிட்டாள் அந்த இளம்பெண்.

`என்மேல உனக்கு அவ்வளவு ஆசையா?' ரகுநாதன் எடுத்த எடுப்பிலேயே குதர்க்கமான கேள்வி ஒன்றைப் போட்டார்.

`உங்கமேல இல்லை சார்... உங்க எழுத்துமேல தீராக்காதல் எனக்கு.. சமீபத்துல தொலைக்காட்சியில் உங்க பேட்டியைப் பார்த்தேன்... உடனே அவங்கள்ட்டயே தொலைபேசி மூலமா உங்க முகவரியைக் கேட்டேன்... தரவே மாட்டோம்னு அடம்பிடிச்சாங்க... தீவிர ரசிகைன்னு கெஞ்சிக்கேட்ட பிறகுதான் கொடுத்தாங்க... இன்னிக்குதான் எனக்கு லீவு கிடைச்சது.. உடனே. கிளம்பி வந்திட்டேன்..'

`என் எழுத்துமேல உனக்கு அவ்வளவு காதலா... ஆச்சர்யமா இருக்கும்மா. அதுவே என்மேல இருந்தா இன்னும் சந்தோசப் பட்டிருப்பேன்... ஆமா, உன் பேர் என்ன எந்த ஊர்லேர்ந்து வர்றேஎன்ன பண்ணிட்டிருக்கே எல்லாத்தையும் சொல்லு..' என்று ரகுநாதன்

## ஹைக்கூ கவிதைகள்.

பானால். சாயிராம். தஞ்சாவூர்.

கையில் ஊஞ்சல் பலகை
தேடுகிறேன்
தாங்கும் மரத்தை -

வெள்ளத்தில்
மிதந்து வருகிறது
வானஊர்தியின் நிழல் -

போர்வீரன் சிலை
வாளின் மேல்
வந்தமரும் வெண்புறா -

எங்கோ கேட்கிறது
விசும்பல் சப்தம்
மறையும் நிலா -

குடிகார ஓட்டுநர்
தள்ளாடுகிறார்
பயணி -

இளித்தார்.

`சொல்றேன் சார்... என் பேர் வான்மதி... டாக்டருக்குப் படிச்சிட்டிருக்கேன்... எங்க ஊரு, புதுக்கோட்டைக்குப் பக்கத்துல இருக்கிற அழகுமலை!'

`அழகுமலை' என்னும் பெயர் காதில் விழுந்ததுமே ரகுநாதன் லேசாக அதிர்ந்ததை வான்மதி கவனிக்கத் தவறவில்லை..

`டாக்டருக்குப் படிக்கிற ஒரு பொண்ணு எனக்கு ரசிகையா இருக்கிறதை நெனச்சா நிஜமாவே எனக்குப் பெருமையா இருக்கும்மா.. அதுவும் நீ அழகா வேற இருக்கே!'

`அழகுமலைக்கு நீங்க வந்திருக்கீங்களா சார்?'

உடனே பதில்சொல்லத் தயங்கினார் ரகுநாதன்

.தைரியத்தை வரவழைத்துக் கொண்டு,` புதுக்கோட்டைல தாசில்தாரா இருந்தப்போ ரெண்டு மூணு தடவை அழகுமலைக்கு வந்திருக்கேன்... பெயருக்கு ஏற்றமாதிரியே ஊரும் அழகா இருக்கும்.. ஆமா நீ என்ன சாப்பிடுறே?'

`எனக்கு எதுவும் வேணாம் சார்... உங்களுக்குப் பிடிக்குமேன்னு செவ்வாழைப் பழம் வாங்கிட்டு வந்திருக்கேன்..' என்றவள் தனது தோளில் தொங்கிய பைக்குள்ளிருந்து நான்கு செவ்வாழைப் பழங்களை எடுத்து மேசை மேல் வைத்தாள்.

`ஆச்சர்யமா இருக்கும்மா.. எனக்குச் செவ்வாழை பிடிக்கும்னு உனக்கு எப்படித் தெரியும்?'

`தொலைக்காட்சி பேட்டில சொன்னீங்களே சார்.. மறந்துட்டீங்களா?'

`இதையுமா சொன்னேன்.. எனக்கு நினைவில்லை... ஆனா எனக்கு செவ்வாழைன்னா நிஜம்மாவே கொள்ளைப் பிரியம்.!'

`அப்படின்னா சாப்பிடுங்க சார்..'

`முதல்ல விருந்தோம்பல்...உனக்கு ஹார்லிக்ஸ் கலக்கி எடுத்திட்டு வர்றேன்... இரு'என்றவர் அடுக்களைக்குள் சென்று, ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு இரண்டு தம்ளர்களோடு வந்தார்.

`இந்தாம்மா, வான்மதி... சாப்பிடு..' என்று ஒரு தம்ளரை அவளிடம் கொடுத்தார். தான் ஒரு செவ்வாழையை உறித்து உள்ளே தள்ளினார். ஆசை அடங்காமல் அடுத்ததையும் உறித்துக் கடித்தார்.

`ஏன் சார் நீங்க கல்யாணம் பண்ணிக்கலை?' என்று வான்மதி அக்கறையோடு கேட்டாள்.

பட்டுக்கோட்டை ராஜாபூடகமாய்ச் சிரித்த ரகுநாதன், `கல்யாணத்து மேல எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லம்மா...

கட்டிக்கிட்டவனுக்கு ஒரு பெண்டாட்டி கட்டிக் காதவனுக்கு ஊரெல்லாம் பெண்டாட்டிங்கிறது என் பாலிஸி.... நீ தப்பா நெனச்சாலும் எனக்குக் கவலையில்லை! ஒரு வட்டத்துக்குள்ளே வாழ்றது எப்பவுமே எனக்குப் பிடிக்காத விஷயம்.” என்றவர் என்னவோ பெரிய சாதனைமனிதர் போல வாய்விட்டுச் சிரித்தார்.

வான்மதி எரிச்சலானாள். இரண்டாவது பழத்தையும் ரகுநாதன் தின்று முடிக்கக் காத்திருந்தாள். ஹார்லிக்ஸையும் குடித்துவிட்டு தம்ளரை கீழே வைத்தார். ஏப்பம் வந்தது.

`ரொம்பநாளைக்குப் பிறகு செவ்வாழை சாப்பிடுறேன்...தேங்க்ஸ் வான்மதி.'

`இதுக்கெல்லாம் எதுக்கு சார் நன்றி... உங்கள்ட்ட பர்சனலா நான் ஒரு விஷயம் கேட்கணும், கேட்கலாமா?'

`எதுவானாலும் தாராளமாக் கேளு... என் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம்!'

`ஏன்சார், அழகுமலைல உங்க எழுத்தில் மயங்கித் தன்னையே முழுசா உங்களுக்குத் தந்தாங்களே நர்ஸ் நளினி, அவங்களை உங்களுக்கு நினைவிருக்கா?'

சட்டென்று வந்துவிழுந்த அந்தக் கேள்வியில் ரகுநாதனுக்குப் பொறி கலங்கிப் போனது. எச்சிலைக்கூட்டி விழுங்கினார். `நீ யாரும்மா?' வார்த்தைகள் தயக்கத்தோடு வெளிப்பட்டன.

`நான் நளினியோட மகள்தான்யா... அவங்க வயித்துல பிள்ளையைக் கொடுத்திட்டுப் பயந்து போய் டிரான்ஸ்ஃபர் வாங்கிட்டு ஓடிவந்தவன்தானே நீ..எங்கம்மா மட்டும் உன்னைக் காட்டிக் கொடுத்திருந்தான்னா தாத்தா அப்பவே உன்னைப் பிணமாக்கி இருப்பாரு... அப்பா யாருன்னு தெரியாம நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா? கடைசிவரை உன்னைக் காட்டிக் கொடுக்காம இருந்தவள் போனவாரம் சாகும்போது நான் வற்புறுத்திக் கேட்டதால உன்பெயரைச் சொன்னா... அவ மானஸ்திய்யா!' வான்மதி ரௌத்திரத்தோடு ஒருமையில் பேசினாள்.

ரகுநாதன் தலைகவிழ்த்து அமைதியாய் உட்கார்ந்திருந்தார். மனசுக்குள் பல எண்ணங்கள் அலைமோதின. சில நிமிடங்களை மௌனம் விழுங்கியது.

இவரையே எரிப்பதுபோலப் பார்த்த வான்மதியிடம்,`என்னை மன்னிச்சிடும்மா... எனக்கு நீ என்ன தண்டனை கொடுத்தாலும் நான் மனசார ஏத்துக்கிறேன்!' என்றார்.

`உனக்குத் தண்டனை கொடுக்கத்தான் உன்னை நான் கஷ்டப்பட்டுத் தேடிக் கண்டுபிடிச்சேன்... உனக்கு நான் தண்டனை கொடுத்திட்டேன்... இப்ப நீ சாப்ட்டியே செவ்வாழைப்பழம், அதுல வரும்போதே `ஸ்லோபாய்ஸனை' இன்ஜெக்ட் பண்ணித்தான் எடுத்திட்டு வந்தேன்... சீக்கிரமே நீ செத்திடுவே... நான் வரட்டுமா?' தோளில் பையை எடுத்து மாட்டிக் கொண்டு கம்பீரமாய் நடந்து போனாள்.

ஃ ஃ ஃ

நடந்தவை அனைத்தையும் மூச்சிரைத்த படியே ரகுநாதன் சொல்லி முடித்ததும் நான் பதறிப் போனேன்``என்ன சார் சொல்றீங்க.. விஷம் கலந்த வாழைப்பழத்தை சாப்ட்டீங்களா..?” எழுந்து அவரின் தோள்களைப் பற்றினேன்.

``பாண்டியன், பயப்படாதே... நான் செத்தாலும் வான்மதியைக் காட்டிக் கொடுத்திடாதே... அவ கையாலயே எனக்குக் கொள்ளிவைக்கச் சொல்லு.. நான்தான் அவளுக்கு அப்பன்னு அவளோட உறவுகளுக்குப் புரியவச்சிடு..” என்று சொல்லிக் கொண்டே வந்தவர் கண்கள் செருகிட மயங்கி நாற்காலியோடு சரிந்து விழுந்தார்.

``சார்... சார்... உங்களுக்கு ஒண்ணும் ஆகாது...என்னைப் பாருங்க சார்!” என்று கத்தியபடியே, வசந்தி கொண்டுவந்த தண்ணீரை அவர் முகத்தில் தெளித்தேன். லேசாக விழிகள் திறந்தன.

அவரை அப்படியே படுக்கவைத்துவிட்டு ஆம்புலன்ஸுக்கு ஃபோன் செய்தேன். ■



# மண்

1.

வளங்கள் பொங்குமா கடலிடை நிமிர்ந்து சிரிக்கிற நம்மட முத்து..
கமுகும், தெங்கும், ரப்பர், தேயிலை, மலையும், பள்ளத்தாக்கும்,
வான் முட்ட மரங்களும், காட்டாற்று வனப்பும்,
மணம் பரப்பும் சோலைகளும் நிறைந்ததெங்கட மண்ணு..
கோட்டைக்கொத்தளமுமகழியும், நீர்த்தேக்கங்கள் நிறைஞ்சு மிளிரும்,
ஓவியம் சிற்பங்களோட கொஞ்சிடுமழகு மனமுமயக்கிடும் கண்ணு..

2.

உயிரோட ஒறவாடும் மண்ணு மணத்த களவாட வந்து குதிச்சதந்த வெடிமருந்து வீச்சம்,
பெருஞ் சத்தத்தோட பொகைய ஊதி விடும் துப்பாக்கி சொண்டுகளும்,
பதைச்சுப் போகும்படி புதைஞ்சுசிரக் குடிச்சிடும் கண்ணிகளும்..
ரத்தக் கவுச்சே மூச்சிக் காத்திலத் தங்கிப் போன சோகம் ஆச்சே..
மேற்கல்வி முடக்கப்பட்டு, வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டு..
உள்நாட்டு அகதியாய் காட்டுக்குள்ளே மறைஞ்சு தொலைஞ்சவனானனன்..

3.

எளந்தாரிப் புள்ளைக இடிவுழுந்தாப்புலலா..
இஞ்சாருங்கோ..! வெளிக்கிட்டுப் போச்சொல்லுங்கோ..கதைச்சுப் போட்டு..
பொளக்கடையில கவுந்தழுதா அம்மை.. கரிப் பானைக்கு
வாயிருந்தா, கதறியழுவுமவ கண்ணீர காணுமது..
விறாந்தையிலே ஆடும் கதிரையிலே அசையாம ஒறஞ்சே அப்பா..
காம்ராவிலே அழுதழுதே கரைஞ்சே மாஞ்சு போனாளென் அக்கா..

4.

ஜோலிக்கும் வழியத்து.. கச்சைக்கும் சல்லியத்து..
அங்கால பொறநாட்டுக்கோடி பொழைக்க ஓர்மையோட..
காலமே விடியுமுன்னே கண்ணு தொறந்திருந்தும் மனச அடைச்சிகிட்டு
அம்மான் மகள் மேலென் ஆசையெல்லாம் மறச்சுகிட்டே..
கப்பலேறி இருந்து கிட்டேன்,
காடுகரை மறைஞ்சு போயும்..
கருத்தில மறையாம நினைவில் தாண்டவமா ஆடுதென் மண்ணு..

# வாசனை



5.

ஏற்றமிறைக்கலியே.. ஏலோலோ கேக்கலியே..
கட்டுமரமேறலையே.. கடலோடித் திளைக்கலையே..
அக்கா சேலை கட்டி மனையமர்ந்தது பார்க்கலையே..
அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, அப்பப்பா பெரும்பயணம்
போனபோது தோள் தாங்க நானில்லையே..
என்னுசரம் வளந்த மகன் அப்பம்மா வாசம் அறியலியே..

6.

பச்ச மண்ணு மகளுக்கு வெத்திலை வாசம் தெரியலியே..
ஆப்பிள் செர்ரி மேப்பிள் பிளம் பீச் எல்லாம் முந்திரியாய் சுவைக்கலியே..
ஓட்ஸ்ஸூ ம் கோதுமை பார்லியும் அரிசிக்கு ஈடாய் இன்னும் மாறலியே.
ஓக் பைன் சைப்ரஸ் பாதை தென்னந்தோப்பு போல அழகில்லையே..
ரோசாப்பூ அழகெல்லாம் கார்த்திகைப்பூ முன் நிற்கலியே..
முதல் மழை வாசம் நுரையீரல் சேகரித்தது மீளலியே..

7.

காதலும், வீரமும், கலாச்சார சாரமும், பண்பாடு பாரம்பரியமும்..
தமிழவளின் செறிவழகும் நிறைமதியாய் பிரகாசிக்கும் என்மண்..
மனதில் அவியாத கங்காய் மண் வாசம் சுமந்து வெளிநாட்டில்..
பேச்சோடு மட்டுமே நின்று போன மண்ணின் மாண்புகளை..
மக்களாவது அனுபவிக்கும் ஆர்வம் உந்திட ஏக்கமாய்..
வயறு வளர்க்க.. புலம் பெயர்ந்த பயிராய் நான்..

8.

அகத்தே அனுக்கமாய் புறத்தே வெகு தூரமாய் நிற்கின்ற தாய்மடியே..!
வந்திறங்கி உறவாட.. கடலோர மணல் வெளியில் காலார நடைபயில..
என் தேச நேச வாசம் உறிஞ்சி காத்திடும் இளநீர் சுவைக்க..
தேசச் சுவை நிறைந்த தேயிலை சரிவுகளூடே..
எந்தையும் என் மகனுடனே கதைத்து நடை போட ..
என்றைக்கு அனுமதி தருவாயடி..?
மண்ணுக்குள் அமிழும் நேரமாவது உன்னை நுகருமா என் நாசி..?

செந்தாமரைக்கொடி



# விட்டுப்போன விடியல்


## பாத்திமா சில்மியா
**இலங்கை**




பரிசுபெறும் கதை

பிரகாஷ் மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் உள்ளதைக்கொண்டு நல்லதை செய் என்பதை போல் தனது தையல் தொழிலை பற்றோடு செய்து கொண்டிருந்தான். அதன் வருமானம் கொஞ்சம் குறைவாக இருந்தாலும் தனது தொழிலை மன நிறைவோடும், ஆத்ம திருப்தியோடும் வாழ்ந்து வந்தான். எல்லை மீறிய ஆசைகள் படாத அவன் உள்ளத்தில் ஏதோ யாரும் தன்னை குறை நினைக்காத ஒரு சாதாரண , சராசரியாக அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு அளவோடு காலத்தை ஓட்டினால் போதும் என்ற மன நிறைவோடு இருந்தான்.

ஒரு நாள், அவனிடம் தனது உடைகளை தைப்பதற்காக ஒருவர் வந்திருந்தார். "சிலருக்கு மற்றவரோடு அளவளாமல் சும்மா இருப்பதே பெரும் கொடுமை, இதனால் தனது பேச்சிலும் மற்றவரை கொடுமை படுத்தா விட்டாலும் திருப்தி இருக்காதே" வந்தவரும் அந்த ரகத்தை சேர்ந்தவர் என்பதனால், அவாரின் ஆடைகளை தைத்து முடியும் வரைஅமர்ந்திருந்த அவருக்கும் , பிரகாஷுக்குமிடையில் கதைகள் பரிமாறப்பட்டது.

"தம்பி பிரகாஷ், உங்களோட முகம் நல்ல ராசியான சீதேவியான முகம். நீங்க இப்படி இருக்க வேண்டிய ஆளில்லை. பெரும் பணக்காரராய் இருக்க வேண்டியவர். நீங்க அதிஷ்ட லாப சீட்டு வாங்கி பாருங்க நிச்சயமாய் அதிஷ்டம் பேசும். நெய்யை கையில் வைத்துக் கொண்டு வெண்ணெய்கு அழைவதுப்போல் எதற்காக முயற்சி செய்யாமல் சும்மா இருக்கீங்க, உங்ககிட்ட ராசியிருக்கு உரசி தான் பாருங்களேன்" என்று பெரும் ஐசாக தலையில் வைத்தார் வந்தவர்.


அதைக்கேட்ட பிரகாஷுக்கோ தூக்கி வாரி போட்டது.

ஒரு வேல இவர் சொல்வது சரியாயிருக்குமோ? நான் பணக்காரனாய் மாறிவிட அதிஷ்டமிருக்கோ?" என்றெல்லாம் இப்போது நினைக்க தொடங்கி விட்டான். அவை சில நாட்களாக அவன் மனதை குடைய ஆரம்பித்தது. தன் எதிர்காலத்தை ஒரு வெளிச்சம் சூழ்ந்து கொண்டிருப்பதாய் உணர்ந்தான். வந்தவர் சொன்னது போலவே அதிஷ்ட சீட்டுக்களையும் வாங்க தொடங்கினான். இதனால் அவன் கவனம் முழுவதுமாக அதிஷ்டம் மீது திரும்பியது. அதுவே அவனுக்கு விடியலாய் தெரிந்தது. பல கனவுகளோடு காலமும் கரைந்தது.

நாட்கள் நகர நகர , தொழிலின் மேலிருந்த பற்று படி படியாக குறைய ஆரம்பித்தது. வாடிக்கையாளர்களும் குறைந்தனர்.

அதிஷ்டமும் பேசவில்லை. இறுதியில் அதிஷ்டத்தை நம்பியவன் செத்தவனுக்கு சமன் என்ற உண்மையை உணரும் அளவிற்கு நிலைமை மாற, இருந்ததையும் இழந்து தவித்த அவனுக்கு வீசிய தெரு விளக்கின் ஒளியைப் போல மின்மினி பூச்சியாய் கனவு ஒளியை விட்டு, இருளை நோக்கிய பயணமாய் வாழ்க்கை மாறிப்போக, மீண்டும் தையல் இயந்திரத்தே நோக்கி நகர்ந்தான் புதிய நம்பிக்கையுடன். ■

# வீதி விளக்கு



### பரிசுபெறும் கவிதை

வரலாற்றில் பதிவான வீதி விளக்கு
பிரலாபமின்றி ஒளிச் சிறகு விரித்து
பிரயத்தனம் செய்கிறது அடரிருள் கலைக்கிறது.
சுரலோகமாக்குகிறது இருள் அரக்கனிட மிருந்து.

ஒளியீயும் விரதம் சலனமற்ற தனிமையில்.
களிப்பாக்கும் கருகல் கவ்விய பாதையை.
ஒளி கண்டனர் அண்ணா ஆபரகாம்லிங்கன்
தெளித்த தெரு விளக்கில் படித்து.

சாதி சமயமின்றி ஒளி உமிழும்
ஊதி அணைக்கவியலாது, இயற்கையால் முடியும்
வீதி விளக்கு அந்தகாரம் என்ற
பீதி அழித்துலகை ஒளியால் கழுவும்.



விளக்கிடும் விளக்கமான கருத்து இதயத்தில்
விளக்கு ஏற்றித் துலக்கமாய் விளங்கும்.
நுளம்பு பூச்சிகளின் இருட்டு நண்பன்.
தளர்ச்சியற்ற தூங்கா விழி விளக்கு.

உச்சியின் கீழ் நம் தலையின்
உள் நடுவிலும் அமைத்தான் விளக்கு.
உண்மையில் அதுவே ஞான விளக்கு.
உடலின் பேரொளி இறைவனெனும் விளக்கு.

தன்னலமற்ற உயரிலக்குடைத் தெரு விளக்கு
என்ன! ஒரு தன்னம்பிக்கைக் கொடையாளி.
சின்ன மனங்கள் பயந்து நடுங்கும்
மின்னல் உலகத் தெரு விளக்கு.

விளக்கு வீதியில்! கிராம முன்னேற்றம்.
இளக்காரமல்ல பல செயல்கள் தெரு விளக்கடியில்
அளக்க முடியாதபடி பகைவனுக்கும் நண்பன்.
ஏழைக்குப் படிப்பறிவு தரும் ஒளிக்கோபுரம்

*(சுரலோகம் - தேவலோகம்.)*

வேதா. இலங்காதிலகம், டென்மார்க்.

# மொழியினம் மீட்க விழித்தெழு மறவா!

## மண்ணும் மொழியினம் மாற்றான் கையில்
## இன்னும் என்னடா இமைக்குள் உறக்கம்?

எழுந்து வாடா எரிதழல் போல
பழுதை எல்லாம் பட்டென எரித்திடு!

ஆண்ட இனமே அடிமை வாழ்வா?
மாண்டது போதும் மற்போர் செய்திடு!

அடிமை வாழ்வை அடித்து விரட்டு
விடிவு பிறந்திட விழியைத் திறந்திடு

மான மறவா! மண்ணை மீட்டிடு
வானம் கூட வந்து வாழ்த்திடும்

தமிழ்நிலம் எங்கும் தர்ப்பை புல்லே
அமிழ்த தமிழை அயலான் அழித்தான்

உன்மொழி பேசிட உனக்குரிமை இல்லை
நன்மொழி மறந்து நஞ்சாய் பேசினை

உலகில் உன்போல் உள்ளவர் இல்லை
நிலத்தை இழந்து நடுத்தெரு வந்தாய்

ஆதி குடிநீ ஆண்ட மறவா!
ஏதிலி போல எங்கும் திரிகிறாய்

வேண்டாம் இழிவு விலங்கை உடைத்திடு
பூண்டோம் போர்க்களம் புலியென புறப்படு

பகைகள் எல்லாம் பரிதிமுன் காரிருள்
தொகையாய் சேர்த்திடு தொல்லைகள் விலகும்

அரிமா தமிழா! அடங்கல் முறையா?
நரிமா ஆள நடுங்கிக் கிடப்பதா?

கரிமா எனவே காட்டு உன்திறன்
பரிமா போல பாய்ந்து குதித்திடு

உன்மொழி தமிழ்மொழி உன் இனம் தமிழினம்
உன்நிலம் தமிழ்நிலம் உணர்ந்திடு நன்றே

மொழியினம் நாட்டை மீட்க
விழித்தெழு இன்றே வீறுடன் மறவா!



புதுவைத் தமிழ்நெஞ்சன்



# கலங்க வைத்த களங்கம்

இறக்காமம் பர்சானா றியாஸ்

அரசாங்க உத்தியோகம் செய்யும் சமீலுக்கு ஞாயிற்றுக்கிழமை வந்தால் பெரும் வரம் கிடைத்து விட்டதாய் உணர்வான். சமீலுக்கு குடும்பத்தினருடன் உறவாடி மகிழும் சந்தோசம் கிடைப்பது இப்படியான நாட்களில்தான். அதனால்தான் அன்றைய ஞாயிறுப் பொழுதும் அவனுக்கு மிகுந்த உற்சாகத்தை கொடுத்திருந்தது. பெற்றோருக்கு மூத்த மகனான அவனுக்கு இளையதாக ஒரு தம்பியும் தங்கையும் இருந்தார்கள்.

அன்று சமீலின் ஆறு வயது தங்கை முன் வாசற் படியில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அவள் சாப்பிடுவதைக் கண்ட காகம் ஒன்று மதிலின் மேல் உட்கார்ந்து கா... கா... எனக் கரைந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து மேலும் ஒன்றிரண்டு காகங்கள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டன. அவள் தனது தட்டிலிருந்து சோற்றுப் பருக்கைகளை எடுத்து அவைகளுக்கு முன்னால் போட்டாள்.

காகங்கள் அவளை நெருங்கி உட்கார்ந்து கொண்டன. கா... கா... எனும் சத்தம் இன்னும் அதிகரித்தமை அங்கே நிறைய காகங்கள் கூடியிருப்பதை உணர்த்தியது. அதுகேட்டு வீட்டுக்குள்ளே உட்கார்ந்திருந்த சமீலின் தம்பி முன் வாசலுக்கு சிட்டாய்ப் பறக்க, அவனை சமீலும் பின் தொடர்ந்தான். அங்கே அவனது தங்கை சில காகங்களை வசியப்படுத்தி விட்ட இறுமாப்பில் அவற்றை தீனியால் அங்குமிங்கும் அலைய விட்டுக் கொண்டிருந்தாள்.

தங்கை போடும் உணவை, ஒரு காகம் முந்திக்கொண்டு மற்றையக் காகங்களை சாப்பிட விடாமல் தடுப்பதையும்;, அதுவே அனைத்து உணவையும் சாப்பிட்டுக் கொண்டிருப்பதையும் இடையிடையே அவதானித்தான் சமீல். காகங்கள் தமக்குள் எல்லைகள் போட்டுக் கொள்வதாகவும் தனக்குரித்தான பகுதியில் ஏனைய காகங்கள் வருவதையோ அல்லது சேர்ந்து உணவு உண்ணுவதையோ அவை விரும்புவதில்லை என்றும் எங்கோ கேள்விப்பட்ட ஞாபகம் சமீலுக்கு வந்தது.

அப்படியானால் இந்த சண்டையிடும் அராஜக காகம்தான் இந்த எல்லையின் தலைவனா? என்ற சந்தேகமும் சமீலுக்கு எழுந்தது. ஏனைய காகங்களும் ஒதுங்கி நின்றமை அந்த சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்தியது. சமீலின் தங்கையும் கூட அந்த அராஜகம் புரியும் காகத்தினை வெறுத்தாள். சற்று பின்னால் அஞ்சி நின்ற காகம் ஒன்றை நோக்கி அவள் உணவை வீசியதும், அதுவும் சட்டென தன் அலகால்

கௌவிக் கொண்டது.

அதைப் பார்த்த சமீலின் தம்பி வெற்றிக் களிப்பில் விசிலடித்தான். சமீலும் கூட அந்த அப்பாவிக் காகத்துக்காக அக்கறையாய் சந்தோசப்பட்டான். ஆனால் அந்த சந்தோசம் ஒரு கணமும் நீடிக்கவில்லை. அராஜக காகம் பறந்து சென்று சட்டென்று தன் அலகை அப்பாவிக் காகத்தின் அலகுக்குள் நுழைத்து அதன் வாயில் இருந்த உணவை பறித்து தன் வசமாக்கிக் கொண்டது.

விளையாட்டாக தொடங்கிய ஒரு வியடமாக இருந்தாலும் அந்த ஒரு காகத்தின் மோசமான நடவடிக்கை மூவரையும் மானசீக ரீதியாக மிகவும் பாதித்திருந்தது. இப்படி குணமுடைய மனிதர்கள் இருந்தால் எவ்வளவு வெறுப்பும் கோபமும் ஏற்படுமோ அப்படி ஓர் உணர்வு அந்தக் காகத்தின் மேல் ஏற்பட்டது. மற்றைய காகங்களுக்காக மூவரும் பரிதாபப்பட்டார்கள். சமீலின் தம்பி கோபம் மேலிட அராஜகக் காகத்தை கல் வீசி விரட்டினான்.

அது பறந்து சென்று கோழிகளை அடைக்க பயன்படுத்தும் கம்பி உருளை ஒன்றின் மீது உட்கார்ந்தது. உணவுத் துணிக்கை ஒன்றை அதனுள்ளே கண்டவுடன் அதனை உண்பதற்காக கம்பி உருளையின் உள்ளே நுழைந்தது. அது மீண்டும் வெளியேறி வருவதற்குள் கணப்பொழுதில் சமீல் ஓடிச்சென்று அருகே கிடந்த தட்டொன்றை எடுத்து உருளையின் வாயை மூடிவிட்டான். அராஜக காகம் உள்ளே மாட்டிக் கொண்டது.


அதைக் கண்டு மூவரும் ஏக காலத்தில் சந்தோசப்பட்டார்கள். அதற்கு பக்க வாத்தியம் வாசிப்பது போல ஏனைய காகங்களின் கா... கா... ஓசையில் சந்தோச வெள்ளம் எங்கும் பிரவாகித்து ஓடுவது போல உணர்ந்தார்கள். சமீலின் தங்கை தட்டில் மீதியாக இருந்த உணவுப் பருக்கைகளையும் அங்கே போடவே அராஜக காகத்தின் முன்னால் அனைத்து காகங்களும் எவ்வித அச்சமோ, பயமோ இன்றி சுதந்திரமாக சாப்பிட்டன.

சற்று நேரம் மூவரும் அதிலேயே லயித்திருந்தார்கள். தனிநபரால் ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்துக்கு நீதி பெற்றுக் கொடுத்த உணர்வுபோல மூவருக்கும் ஒரே மகிழ்ச்சி. இன்னும் சொல்லப்போனால் சுயநலப்போக்குக்கு எதிராக மூவரும் கொண்ட வெறுப்பு தீரும்வரை அராஜக காகம் கூட்டுக்குள் தண்டிக்கப்பட்டது. சற்று நேரத்தில் சமீலின் தங்கை பார்க்க பாவமாயிருப்பதாக கூறி அராஜகக் காகத்தை திறந்து விடுமாறு கேட்டுக் கொண்டாள்.

தங்கையின் வேண்டுகோளுக்கு இணங்கி சமீல் அதை திறந்து விட்டான். அது நேராக பறந்து சென்று அருகேயிருந்த மாமர உச்சியில் போய் உட்கார்ந்து கொண்டது. அது மீண்டும் அங்கே மீதமாக கிடக்கும் உணவுப் பருக்கைகளை சாப்பிட வரும் என்று எதிர்பார்த்த அவர்களுக்கு அது மேலே பறந்து சென்றது, மூவருக்கும் சற்று ஏமாற்றத்தை கொடுத்திருந்தது. அந்தக் காகத்துக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டோம். இனிமேல் அப்படி நடக்காது என மூவரும் பேசிக் கொண்டார்கள்.

தவறுகளை அவ்வப்போது தண்டித்தால் உடனுக்குடன் திருத்தங்களை எதிர்பார்க்கலாம் என்று ஒரு வேதாந்தம் சமீலின் எண்ணத்தில் பளிச்சிட்டு சென்றது. அப்போது அந்த மாமர உச்சியிலிருந்து மெல்லிய ஓசை வருவதைக் கேட்ட சமீல் இருவரிடமும் அமைதியாக இருக்கும்படி கூறிவிட்டு மாமரத்தின் மேல் ஏறினான். சற்று தூரத்தில் அவன் கண்ட காட்சி மெய் சிலிர்த்தது. ஆம் அந்தக் காகம் தன் குஞ்சுகளுக்கு உணவூட்டிக் கொண்டிருந்தது.

சற்று முன் சமீலின் தங்கை வாசலில் போட்ட பருக்கைகள்தான் அந்த உணவுகள். தன் அலகுகளால் குஞ்சுகளுக்கு ஆதரவாக பரிமாறிக் கொண்டிருந்தது. தாய்மையின் மகத்துவத்தை சாதாரண மனிதர்களால் எடைபோட்டு விட முடியாது என்ற ஒரு வேதாந்தத்தை அவனது உள்மனம் உச்சரிப்பதற்கு முன்னர் கண்கள் குளமாகி நின்றன. அந்தக் கண்ணீருக்குள் அந்த காகத்தையும் குஞ்சையும் தவிர மற்ற எல்லாமே அவனுக்கு மங்கலாய் தெரிந்தது.





உள்ளமதை வெளிப்படுத்தும்
உயர்வானக் கண்ணழகோ?
இதழ்பூசும் வண்ணமது
இதயத்தைக் கவர்ந்ததுவோ?

பக்கத்து வீட்டு பரிமளம் வந்து அந்த விஷயத்தைச் சொன்னதிலிருந்து ரேகாவுக்கு இருப்புக்கொள்ளவில்லை.

"நீ என்னப்பா சொல்றே? சரியா பார்த்தியா?" என்று மீண்டும் நம்பமுடியாதவளாய்க் கேட்டாள் ரேகா.

"பஜார்ல காய் கறி வாங்கப் போயிருந்தேம்பா. யாரோ ஒரு பொண்ணை ஸ்கூட்டர்ல உட்கார வச்சுக்கிட்டுப்போய்க்கொண்டிருந்தார் உன்னோட வீட்டுக்காரர்" திரும்பவும் சொன்னாள் பரிமளா.

'குபீர்' என ஆத்திரம் அவள் உடல் முழுக்கப் பரவியது.

யாரவள்?

கேள்வி எழுந்து அவள் மண்டையைக் குடைய ஆரம்பித்தது.

கணவன் உதயகுமார் பணியாற்றும்




# யார் அந்த நிலவு?

மலர்மதி

அலுவலகத்தில் ஆண்டு தோறும் கலை நிகழ்ச்சி நடப்பதுண்டு. இவ்வாண்டு நிகழ்ச்சி நடத்தும் பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்காகவே அவன் இரவு, பகல் என்று பாராமல் பறந்துக்கொண்டிருக்கிறான்.

ஒரு வேளை, அது சம்பந்தமா அலுவலகத்தில் பணியாற்றும் சக பெண் ஊழியரைத் தன்னோடு கூட்டிக்கொண்டுபோயிருந்திருக்கலாம்.

வாய்ப்பிருக்கிறது. ஆனால், சந்தேகப் பேய் யாரை விட்டுவைத்திருக்கிறது?

அன்று தாமதமாய் களைத்து வீடு திரும்பியவனிடம் அது பற்றி கேட்கும் தைரியம் வரவில்லை. அவன் வேறு சீக்கிரமே படுத்துவிட்டான்.

...

மறு நாள்.

மாலையில் திடீரென வந்தவன், "என்ன ரேகா நீ? இதுவரையில் ரெடியாகாமல் இருக்கே? இன்னைக்கு என் ஆபீஸ்ல ப்ரோக்ராம் இருக்குன்னு உனக்குத் தெரியும்ல?" என பரபரத்தான்.

அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

இந்த ஆண்களையே நம்பமுடியாது. ரிகல்சல் அது இது என்ற சாக்கில் கூடப் பணிபுரியும் பெண்களிடம் வழியாமல் இருப்பார்களா?

சந்தேகம் வலுத்தது.

வேண்டாவெறுப்போடு அவனுடன் கிளம்பினாள்.

என்றாலும் 'யார் அந்தப் பெண்?' என்கிற கேள்வி மட்டும் அவள் மூளையைவிட்டு அகல மறுத்தது.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டேவிட்டாள்.

"ஏங்க.. யாரோ ஒரு பொண்ணை நீங்க ஸ்கூட்டர்ல உட்கார வச்சுக்கிட்டுச் சுத்திக்கிட்டிருந்ததா பக்கத்து வீட்டுப் பரிமளம் சொன்னா. யாருங்க அது?"

"பொண்ணா..?" என்று குழப்பமாய்க் கேட்டான்.

நடிக்கிறான்.

சிறிது நேரத்தில், "அடடா.. அந்தப் பொண்ணா..? சரி நிகழ்ச்சி முடியட்டும் சொல்றேன்." என்றவன் நாடகத்தில் ஒன்றி போனான்.

நாடகத்தில் நடித்த அந்தப் பெண் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தாள். அவளுடைய நடிப்பு அனைவரையும் கைதட்டவைத்தது.

ரேகாவும் அந்தப் பெண்ணின் நடிப்பில் மெய்மறந்துப்போனாள்.

ஒருவழியாக நிகழ்ச்சிகள் முடிந்தன.

ரேகாவை அழைத்துக்கொண்டு மேடைக்குப் பின்புறமிருந்த அறைக்குப் போனான் உதயகுமார்.

நாடகத்தில் பங்கேற்றவர்கள் அங்கேக் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெண்ணும் இருந்தாள்.

அவளை ரேகாவிடம் அறிமுகம் செய்துவைத்தான் உதயகுமார்.

"ரேகா.. நீ கேட்டியேப் பெண், அவள் தான் இவள். இவளைத்தான் நான் ஸ்கூட்டரில் கூட்டிக்கிட்டு வந்தேன். நீ என்ன, எல்லோருமே இவனை பொம்பளைன்னுத்தான் நினைச்சுக்கிட்டிருக்காங்க. உண்மையில் இவன் என்னுடன் பணியாற்றும் ஆம்பளை. எப்படி இந்த மேக்அப்?" என்று சொல்லிச் சிரித்தான்.

சந்தேக வண்டு சடுதியில் காணாமல்போனது.

வெட்கித் தலைக்கவிழ்ந்தாள் ரேகா. ■

# இந்த இடத்துக்குப் போயிருந்தேன்!



நம்முடைய சந்திப்பைத்
தொடர்ச்சியாக்கிய இடம்.

எதிரே நூலகமும்,
இடதுபுறத்தில் புல்வெளியும்
அப்படியே தானிருக்கின்றன.

மரங்கள் முன்பைவிடவும்
கொஞ்சம் வளர்ந்திருக்கின்றன
நம்முடைய நேசத்தைப் போல!

அந்த இடத்தை மறக்க முடியாது.
அமுத சுரபி போல
காதல் சுரந்த இடமது!

நீயறியாமல் உன்னை
அல்லது நீயறிந்து நான்
மோகிக்கொள்ள முயன்ற
முதல் முற்றமது.

எத்தனைமுறை சரிசெய்தும் விலகாமல்
தாவணியை காற்று தொந்தரவுபடுத்திய
அந்த இடத்தை நீயும்,
மறந்திருக்க வாய்ப்பில்லை!

அந்த இடத்தை பற்றிச்
சொல்வதற்குக் காரணமிருக்கிறது...

இப்போதும் அங்கே
இரண்டுபேர் அமர்ந்திருக்கிறார்கள்
வெறும் நட்புதானென்று
வெளியே சொல்லிக்கொண்டு!

**நிசா துரை**



# என்ஓட்டம் என்இலக்கு



செந்தமிழே ஆட்சிமொழி; பள்ளி யெல்லாம்
செந்தமிழே கல்விமொழி; தெருவி லெல்லாம்
செந்தமிழே பேச்சுமொழி; வீட்டி லெல்லாம்
செந்தமிழே மழலைமொழி; குவிந்தி ருக்கும்
செந்தமிழின் நூல்களெல்லாம் மொழிபெ யர்த்தும்
செந்தமிழில் பிறமொழிநூல் ஆக்கம் சேர்த்தும்
எந்தமிழை உலகமொழி ஆக்க லொன்றே
என்இலக்கு என்ஓட்டம் முயல்வேன் செய்வேன்!

மக்களுக்காய் ஆட்சிசெய்த மன்னர் நாட்டில்
மக்களாலே தேர்வுபெற்ற அமைச்ச ரெல்லாம்
தக்கபடி செங்கோலில் நடந்தி டாமல்
தன்னலத்தால் நாடுதனைச் சுரண்டு கின்றார்
சொக்கவைக்கும் சொல்பேசி செயலில் மாறும்
சொரணையில்லா அரசியலைத் திருத்து கின்ற
தக்கபணி செய்வதினை இலக்காய் வைத்துத்
தடையுடைத்தே ஓடுகின்றேன் வெல்வேன் வீழேன்!

இடையினிலே வந்தசாதி மதங்க ளாலே
இருந்திட்ட ஒற்றுமைதான் போயிற் றின்று
கடைச்சரக்காய் ஆனதிங்கே மனித நேயம்
காசிற்கே அன்புவாங்கும் நிலையா யிற்று
விடைகொடுத்து வன்முறைக்கு; சமத்து வத்தை
வீதியெல்லாம் நிலைநிறுத்த இலக்கு வைத்தேன்
நடைமாற்றி அதையடைய ஓடு கின்றேன்
நான்வெற்றி பெற்றிடுவேன் பொதுமை செய்வேன்!



**பாவலர் கருமலைத்தமிழாழன்**

# வெட்டிக்காடு
## சுயபுனைவின் வெளிப்பாடு




இலக்கிய வடிவமும் பாடுபொருளும் படைப்போரும் ஒவ்வொரு காலத்திலும் வேறுபட்டு வந்துள்ளமையை இலக் கிய வரலாற்றின் தொடர்ச்சியைக் கவனிக்கும் பொழுது அறியமுடிகின்றது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகம் முழு வதும் இலக்கியப்போக்குகளில் புதுப்புது மாற்றங்களைக் காணமுடிகின்றது. அதில் ஒன்று சுயபுனைவு (Auto Fiction) என்னும் வெளியீட்டு முறை. தன் இளமைக் கால வாழ்க்கையைப் புனைவுகளை இணைத்து வெளிப்படுத்தும்பொழுது அரிய படைப்பாக இலக்கியம் உருவாகிறது.

தம் இளமைக்கால வாழ்க்கையைப் படைப் பாக்குவதில் மேற்குலகப் படைப்பாளிகள் முன்னின்றதைத் திறனாய்வாளர்கள் எடுத்துரைக்கின்றனர். 1977 இல் சுயபுனைவு என்னும் சொல்லை வழங்கியவர் செர்ஜ் தூப்ரோவ்ஸ்கி (Serge Doubrovsky). குறிப்பாகப் பிரெஞ்சுத் தேசத்தில் வாழ்ந்த படைப்பாளிகள் மிகச் சிறந்த புனைவு இலக்கியங்களைத் தந்துள்ளனர். ஹினெர் சலீமின் அப்பாவின் துப்பாக்கி என்னும் புனைவு இலக்கியம் குர்தீஸ்தான் விடுதலைப் போரை மிக அழகிய வடிவில் தந்துள்ளது. சலீம் சுயபுனைவாகத் தம் படைப்பை உருவாக்கினாலும் குர்திஸ்தானின் பழைய வரலாறு, பண்பாட்டுச்சிறப்பு, வாழ்க்கை முறை என அனைத்தையும் நுட்பமாகப் பதிவுசெய்திருப்பார்.

சுயபுனைவு வடிவில் தமிழில் நிறைய படைப்புகள் சிறுகதையாகவும், புதினமாகவும், திரைப்படமாகவும், கவிதைகளாகவும் வந்துள் ளன. கி. ராவின் பிஞ்சுகள் என்ற குறுநாவல் சுயபுனைவுக்கு நல்ல சான்று. பேராசிரியர் த. பழமலய் அவர்களின் சனங்களின் கதை குறிப்பிடத்தக்க படைப்பு. சேஷாசலத்தின் ஆகாசம்பட்டு, சிற்பியின் கிராமத்து நதி குறிப்பிடத்தக்க கவிதை இலக்கியங்களாகும். கிராமப்புறத்து நிகழ்வுகள், கதைமாந்தர்கள், சொல்லாட்சிகள் கொண்டு புதிய இலக்கியப் போக்காக இத்தகு நூல்கள் வெளிவந்த பிறகு பல்வேறு படைப்புகள் தமிழில் வெளிவந்தன. குறிப்பாக நடுநாட்டு இளைஞர்கள் தங்கள் படைப்புகளில் தங்கள் வாழ்க்கை, பழக்க வழக்கம், குடும்ப அமைப்பு, ஊர், உறவு, தெய்வம் என அனைத்தையும் உள்ளடக்கிய படைப்புகளை வழங்கினர். தங்கர்பச்சானின் ஒன்பதுரூபாய் நோட்டு, வெள்ளைமாடு, குடிமுந்திரி உள்ளிட்ட படைப்புகளைச் சொல்லலாம். கி. தனவேல் இ.ஆ.ப. அவர்களின்

செம்புலச் சுவடுகள் நூலில் புதுக்கூரைப்பேட்டை (இன்றைய நெய்வேலியின் பகுதி) மக்களின் வாழ்க்கைச் சுவடுகள் பதிவாகியுள்ளன.

வெட்டிக்காடு என்னும் தம் ஊர்ப் பெயரில் பொறியாளர் இரவிச்சந்திரன் எழுதியுள்ள நூல் சுயபுனைவு வடிவில் வந்துள்ள சிறந்த நூலாக புலப்படுகின்றது. பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பலர் நல்ல மதிப்பெண் எடுத்து மாநில அளவில் முதன்மை பெற்றுப் பாராட்டுப் பெறுவதை ஆண்டுதோறும் காண்கிறோம். இப்படித் திறன் படைத்த மாணவ மாணவியர் பிற்பாடு என்ன ஆனார்கள் என்பதை அவர்களே சொன்னால்தான் உண்டு. இந்நூல் பள்ளியில் பத்தாம் வகுப்பில் மாநில முதன்மை பெற்ற கிராமத்து மாணவரான இரவிச்சந்திரன் கல்வி தனக்கு ஏற்றம் தந்ததை விளக்கும் நூல்.

இரவிச்சந்திரன் இப்போது உலகளாவிய அளவில் முன்னோடித் தொலைத்தொடர்பு கட்டமைப்புத் திட்டங்களில் (Telecommunications Network) மின்னணுப் பொறியாளராக பணியாற்றுகிறார். மிகச் சிறந்த எழுத்தாளராகவும் மலர்ந்துள்ள இவர் அமெரிக்கக் குடியுரிமை பெற்று, பணியின் காரணமாகச் சிங்கப்பூரில் வசித்துவருகிறார். ஒவ்வொரு நாளும் அலுவல் காரணமாக கண்டம்விட்டுக் கண்டம் பறக்கிறார். வானுலக வாழ்க்கை வாழ்ந்து வந்தாலும் தாம் பிறந்த வெட்டிக்காடு என்னும் சிற்றூரின் நினைவு இவரைப் பேயைப் போல் பிடித்தாட்டியதால் தம் அனுபவங்களை 2003 முதல் எழுதத் தொடங்கினார்.

இரவி 17 வயது வரை தஞ்சை மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில் உள்ள வெட்டிக்காடு ஊரில் வாழ்ந்து, சராசரி உழவர் குடும்பத்தின் அனைத்து வகையான மேடுபள்ளங்களையும் கடந்து, கிண்டிப் பொறியியல் கல்லூரியில் மின்னணுப் பொறியியல் படித்து, தெற்கு ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் மேலாண்மைப் பட்டம் (எம்.பி.ஏ) பெற்றவர். பத்தாம் வகுப்பில் மாநில அளவில் தர முதன்மை பெற்று, இந்திய அரசின் உதவித் தொகைபெற்றுப் பொறியியல் கல்வி பெற்றவர். இவரின் உள்ளம் கிராமத்து இளைஞனின் உள்ளம். பதினேழு வயது வரை வாழ்ந்து பெற்ற அனுபவங்கள் ஆழ்மனத்துள் புதைந்து கிடந்து, நேரமும் சூழலும் உந்தித் தள்ள அவை சிறுகதை, கவிதை, எழுத்துரை எனப் படைப்புகளாக வெளிவந்துள்ளன.

தம் கிராமத்து இளமைக்கால நினைவு களையும் சில உண்மை நிகழ்வுகளையும் அவ்வப்பொழுது கட்டுரையாக்கிய இவர், இவற்றைத் தொகுத்து வெட்டிக்காடு என்னும் தலைப்பில் நூலாக்கியுள்ளார். வெட்டிக்காடு, காடுவெட்டி என்னும் ஊர்ப்பெயர்கள் பண்டைக் காலத்தில் மக்கள் காடு கரம்புகளை அழித்து ஊராக்கிய வரலாற்றைச் சொல்கின்றன. அந்த வகையில் வயலும் வயல்சார்ந்த பகுதியுமாக விளங்கும் வெட்டிக்காடு என்னும் சிற்றூரில் வாழ்ந்த சோமு ஆலம்பிரியர் என்னும் நெல்வணிகரின் மகனாகப் பிறந்து, படிப்புடன் ஊடுதொழிலாக ஆடுமாடுகளை மேய்ப்பது ஏரோட்டுவது, பனங்காய் வெட்டுவது, நாவல் பழம் பறிப்பது என்று கிராமத்துக்குரிய அனைத்துப் பொழுதுபோக்குகளையும் பயின்ற

## முனைவர் மு. இளங்கோவன்

புதுச்சேரி

ஒரு பட்டிக்காட்டுச் சிறுவனின் இளமைக்கால நிகழ்வுகள்தான் இந்த வெட்டிக்காடு நூலின் உள்ளடக்கமாக விரிந்து நிற்கின்றது.

வெட்டிக்காடு நூலில் கரைந்த எழுத்தாளர் வேல. இராமமூர்த்தி, முனைவர் ம.இராசேந்திரன், நீதியரசர் நாகமுத்து ஆகியோரின் அணிந்துரைகள் நூலின் சிறப்புகளை இனங் காட்டியுள்ளன. இரவிச்சந்திரனின் இன்றைய வளர்ச்சி நிலையையும், கடந்துவந்த பாதை களையும் வியப்புடன் பார்த்து மகிழும் அணிந்துரை அறிஞர்கள் தங்கள் இளமைக் கால நிகழ்வுகளையும் கிராமப்புறங்கள் நாகரிக வளர்ச்சியால் அடையாளங்களை இழந்து வரு வதையும் மறவாமல் பதிவுசெய்துள்ளனர்.

சமூக பொருளாதார மேல்சாதிக்காரர்களால் வரலாறு எழுதப்படும் சூழலில் அடித்தட்டு மக்க ளின் வரலாறு (Subaltern History) எழுதப்பட்டு வருவதை வரவேற்கும் சுந்தர்ராஜ் மாணிக்கம்

போன்றவர்களை நினைக்கும்பொழுது வெட்டிக் காடு நூலின் முக்கியத்துவம் விளங்கும்.

பன்னிரண்டு தலைப்புகளில் அமையும் வெட்டிக்காடு நூல் உழைக்கும் மக்களின் வாழ்க்கை வரலாற்றைச் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளது.

வெட்டிக்காடு என்னும் முதல் தலைப்பில் ஊர் அமைவிடம், உழவுத்தொழில் செய்யும் மக்களின் நிலை, ஊரின் காலைக்காட்சி உள்ளிட்ட தாம் பதினேழு ஆண்டுகள் வாழ்ந்த ஊரின் சிறப்புகளை இரவி பதிவுசெய்துள்ளார். உழுதல், விதைத்தல், பறித்தல், நடுதல், அறுத்தல் என்று ஆறு மாதம் ஊர் அமர்க்களப்படும். இங்கு நடவுப்பாடல் வழியாகவும், தெருக்கூத்துகள் வழியாகவும் இசைத்தமிழ் வளர்ந்ததை இரவிச்சந்திரன் குறிப்பிடுகின்றார். மாடுமேய்த்தலும், ஆடுமேய்த்தலும் கிராமங்களின் தேசியத்தொழிலாகும். கபடி விளையாடுதல், ஓரியடித்தல், கிளிகோடு பாய்தல், பந்தடித்தல், பட்டம் விடுதல் போன்ற கிராமத்து விளையாட்டுகள் இடம்பெற்றுள்ளன.

வெட்டிக்காட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி பெருந்தலைவர் காமராசரின் கல்விக்கொடையால் கிடைத்தது. இரண்டு ஆசிரியர்களுடன் எழுபத்தைந்து மாணவர்களைக் கொண்டு பீடுநடைபோட்ட பள்ளி அது. இரவிச்சந்திரன் நான்காம் வயதில் அடம்பிடித்துப் பள்ளிக்குச் சென்றது முதல் சுப்பிரமணியன் ஆசிரியரிடம் அகரம் பயின்றது வரையிலான செய்திகளைப் படிக்கும்பொழுது கிராமத்து மனிதர்கள் அனைவரும் தங்களின் இளமை வாழ்க்கைக்குக் கட்டாயம் திரும்புவார்கள். ஒன்றாம் வகுப்பில்(1973) சேர்ந்தது தொடங்கி தம் வாழ்க்கைக் குறிப்புகளை இந்நூலில் பதிவு செய்துள்ளார் இரவி. வேப்பங்குச்சியில் பல்துலக்கியது, கிராமத்து ஏரிகளில் குளித்தமை பற்றி விளக்கும் இரவிச்சந்திரன் பேஸ்ட், பிரஷ், சோப் நாங்கள் பார்க்காதது என்கின்றார். பழைய சோறும் தயிரும் உணவாக அமைந்த கிராமத்து வாழ்க்கையில் இட்டிலி, தோசை போன்ற உணவுகள் பொங்கல் தீபாவளியில்தான் கிடைக்கும் என்கின்றார். நம் உணவு, பழக்க வழக்கம், பண்பாட்டு மாற்றங்கள் எவ்வாறு மாற்றங்களைச் சந்தித்துள்ளன என்பதை எதிர்காலத் தலைமுறைகள் அறிந்துகொள்வதற்கு இந்த நூல் ஒரு சமூக ஆவணம்.

அக்கா திருமணத்தன்றும் விடுப்பு எடுக்காமல் பள்ளிக்கு வந்ததைப் பாராட்டிய சுப்பிரமணியன் சாரின் பேருள்ளம் இந்த நூலில் பதிவாகியுள்ளது. பள்ளிக்கு நாள்தோறும் செல்லும் பழக்கத்தை நினைவூட்டும் இரவி, பின்னாளில் இரண்டு முறை விடுப்பெடுக்க நேர்ந்தமைக்கான காரணத்தையும் கூறத் தயங்கவில்லை, பன்னிரண்டு ஆண்டு பள்ளி வாழ்க்கையில் மஞ்சள் காமாலை நோயும், கடுங்காய்ச்சலும் விடுப்பெடுக்க வைத்ததைக் குறிப்பிடுகின்றார் (பக்கம்42). எட்டுக் கிலோ மீட்டர் தொலைவிலிருந்த மன்னார்குடிப் பள்ளிக்குப் பேருந்தில் செல்லக் காசு இல்லாத பொழுது, நடந்தே சென்றுள்ளதையும் காலில் செருப்பில்லாமல் நடந்துபோனதால் தார் காலில் படிந்து சுட்ட நிலையையும் படிக்கும்பொழுது இரவியின் வறுமை வாழ்க்கை கண்ணீர்வரச் செய்கின்றது.

அரசுபள்ளிகள் ஆதரிப்பார் இன்றிக் கிடக்கும்பொழுது, இன்றைய கான்வெண்டு கல்விக்கூடங்கள் வேன்களிலும் ஆட்டோக்களிலும் கிராமத்துப் பிள்ளைகளைச் சீருடைகளில் அள்ளிக்கொண்டு போவதைக் காணும்பொழுது தமிழகக் கல்வி வரலாறு இருவேறு துருவங்களில் பயணம் செய்வதை உணரலாம். 'எருமை மாடு மேய்க்கிறவனுக்கும் மாட்டுக்கறி திங்கிறவனுக்கும் படிப்பு வராது" என்று சுப்பிரமணியன் ஆசிரியர் சொன்னதை நினைத்த இரவி மாடுமேய்க்க மறுத்த நிகழ்வும் பதிவாகியுள்ளது. எந்த ஒளிவு மறைவும் இல்லாமல் இளமை வாழ்க்கையைத் திறந்து காட்டியுள்ள இரவியின் எழுத்துகள் தமிழ்கக் கல்வி வரலாற்றை அறிய விரும்புவர்களுக்குப் பேருதவி புரிவன.

கிண்டிப் பொறியியல் கல்லூரியில் சேரும் தம் பதினேழாம் வயதுவரை மாடுமேய்த்த வரலாற்றை நினைவுகூர்ந்துள்ளார். படிப்பறிவு இல்லாத அம்மாவுக்கு மாடுமேய்ப்பதைச்

செய்யாத மகன்மேல் எப்பொழுதும் கோபம்தான். எழுதிய நோட்டுகளைக் கிழித்தமை, நான்காம் வகுப்பில்தான் ஏபிசிடி படிக்கத் தொடங்கியது, ஐந்தாம் வகுப்பில் ஆங்கிலத்தில் பெயர் எழுதியது என்று பூர்வாசிரம வரலாறு பதிவாகியுள்ளது. ஆங்கிலத்தில் 36 மதிப்பெண் வாங்கியதற்குத் திட்டித் தீர்த்த இந்திரா டீச்சர், “பர்ஸ்ட் ரேங் மாணவன் சீனிவாசன் ஆங்கிலத்தில் 98ஞ் நீயெல்லாம் கிராமத்துல மாடு மேய்க்கதான் லாயக்கு”(பக்கம் 52) என்று கூறிய கண்டிப்புச் சொற்களும் அவமானச் சொற்களும்தான் இரவியை உயர்ந்த இடத்திற்குக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளன. அதே இந்திரா டீச்சர் இரவியின் மாநில முதன்மை மதிப்பெண் பார்த்து, வாழ்த்தியிருப்பது நெகிழ்ச்சி! தம் இளமைக்கல்விக்கு வித்திட்ட சுப்பிரமணியன் சார், முத்துக்கிருஷ்ணன் சார் இருவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்துள்ளார்.

பள்ளியைத் திறப்பது, கூட்டுவது, மணி அடிப்பது, உணவுக்குரிய பொருள்களை எடுத்துத் தருவது, உணவு சமைப்பது, பரிமாறுவது, ஆசிரியர்களுக்குத் தேநீர் வாங்கிவருவது, ஆசிரியர்களின் வயல்வேலைகளின்பொழுது அதற்குரிய குற்றேவல் செய்வது, ஆசிரியர்கள் வராதபொழுது வகுப்புகளை அமைதியாகப் பார்த்துகொள்வது, பள்ளியைப் பூட்டிச் செல்வது வரையிலான கிராமப்புறப் பள்ளிப் பணிகளை மனந்திறந்து எழுதியுள்ளார். இந்த வாழ்க்கையை இன்றைய மாணவர்கள் கேட்பதற்குக்கூட வாய்ப்பில்லை.

தேர்வில் பார்த்து எழுதுவது தவறு என்பதை அடிப்படைக் கொள்கையாக வைத்திருந்த இரவி தம் கிண்டிப் பொறியியல் கல்லூரிச் சம்பவங்களை நினைவுப்படுத்தி, அங்கும் தான் பார்த்து எழுதாமல் நேர்மையாக எழுதியதைப் பதிவு செய்கின்றார். தவறு செய்வதற்குரிய வாய்ப்பு வந்தாலும் அங்கும் நேர்மையுடன் நடந்துகொள்ளும் உயர்பண்பே இவருக்கு வாழ்க்கையில் முன்னேற்றங்களைத் தந்தது என்கின்றார். வெட்டிக்காடு தொடக்கப்பள்ளியில் பெற்ற படிப்பு, நேரம் தவறாமை, ஏற்றுக்கொண்ட பொறுப்புகளைத் முழுமனத்துடன் திறம்படச் செய்தல், நேர்மை




போன்ற பண்புகளே முன்னேற்றத்திற்குக் காரணம் என்கின்றார்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள உன்னால்முடியும் தம்பி என்ற சிறுகதையில் சண்முகம் என்ற பாத்திரத்தின் வழியாக இரவி தம் இளமைக்கால வாழ்க்கையைப் பதிவு செய்துள்ளார். வெட்டிக்காட்டுக்கு அருகில் உள்ள மூவாநல்லூர் கிராமத்தில் ஏழாம் வகுப்புப் படித்தபொழுது கடலைச்செடிக்குத் தண்ணீர் இறைத்திருக்கிறார். பெற்றோரோ கல்விக்கு ஆதரவு தரவில்லை. இந்நிலையில் ஆசிரியர் இராஜகோபால் என்பவர் கொடுத்த ஊக்கமும் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கிராமப்புறத்து மாணவர்கள் கல்வி கற்பதில் உள்ள தடைகளையும் உதவிய ஆசிரியர்களின் செயல்பாடுகளையும் இரவி நினைவுகூர்ந்துள்ளார். வறுமையில் படித்து முன்னேறி, அமெரிக்காவில் தொழில் நுட்ப நிறுவனத்தின் பொறியாளராக உயர்வு பெற்றுத் தாம்படித்த பள்ளிக்குச் சிறப்பு விருந்தினராக வந்த நிலையை அழகிய கதையாக்கிக் காட்டியுள்ளார். கவிதை, கதை, உரைநடை என்று பல்வேறு வடிவங்களில் இந்தப் படைப்பை அமைத்துள்ளார்.

அய்யனார்சாமி என்ற சிறுகதையில் புலவர் சுவுந்தரராசன் பகுத்தறிவுக் கொள்கையுடையவர் எனவும், அச்சம் என்பதை அறியாதவர் எனவும் தவறு செய்யும் மாணவர்களைத் தண்டிப்பதில் தயக்கம் காட்டாதவர் எனவும் அறிமுகம் செய்கின்றார். அதே நேரத்தில் ஏழை மாணவர்களுக்குப் புத்தகம், குறிப்புச்சுவடி

வாங்கித் தருவதுடன் தம் மன்னார்குடி வீட்டுக்கு விடுமுறை நாளில் வரச்செய்து உணவுகொடுத்துப் படிப்புச்சொல்லித் தருவார் என்றும் அவரின் பொறுப்பார்ந்த ஆசிரியப்பண்புச் சிறப்பையும் நமக்கு அறிமுகம் செய்துள்ளார். புலவர் ஐயா தம் இடுப்பில் கத்தியை எப்பொழுதும் சொருகியிருப்பார் எனவும் ஒருமுறை விடுப்பு தராத தலைமையாசிரியரின் மேசைமீது கத்தியை எடுத்துக் குத்தி, மிரட்டியதையும் இக்கதையில் இரவி குறிப்பிட்டுள்ளார். மாணவர்கள் செய்யும் குறும்புகளைக் கவனித்துப் புலவர் கடும் தண்டனை கொடுத்ததால் பல மாணவர்கள் பள்ளிக்கு வராமல் போனதையும் குறிப்பிடுகின்றார். கடைசி பெஞ்சு இராமமூர்த்தி அய்யனார்சாமி போல் அருள் சொன்னதை விளக்கியுள்ள காட்சி இரவியிடம் மிகச்சிறந்த எடுத்துரைப்பு ஆற்றல் உள்ளதை நமக்கு நினைவூட்டுகின்றது.

கொட்டாப்புலிக் காளைகள் என்ற தலைப்பில் இரவி எழுதியுள்ள செய்திகள் படிப்பவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டும் நிகழ்வுகளாக விரிந்துள்ளன. அப்பா பட்டுக்கோட்டைச் சந்தையிலிருந்து வாங்கிவந்த கன்றுக்குட்டிகள் வளர்ந்து ஏரோட்டவும், வண்டியில் பூட்டவும் பழக்கிய நிகழ்ச்சிகளைக் கண்முன்கொண்டுவந்து இரவி நிறுத்துகின்றார். அப்பா, அம்மா, வீட்டு வேலையாள் நாகநாதன் மூவர்தான் அந்தக் கொட்டாப்புலிக் காளைகளைப் பிடிக்கமுடியும் என்ற நிலையில் ஊரில் சண்டியராக வலம்வந்த வேணு ஆலம்பிரியரை அந்த மாடுகள் முட்டி வேலியில் தள்ளியதையும் அம்மாவின் குரலுக்குப் பணிந்து அந்த மாடுகள் அம்மாவை நெருங்கி வந்ததையும் அறியும்பொழுது நமக்கு ஆச்சரியத்தை இந்தக் கதை ஏற்படுத்துகின்றது.

வீட்டில் வளர்க்கப்படும் மாடுகள் அறிவுள்ளவையாகவும், மானமுள்ளவையாக வும், வீரமுள்ளவையாகவும் இருப்பதைக் கொட்டாபுலிக் காளைகள் கதை உணர்த்து கின்றன. ஒவ்வொரு நாளும் தம்மைக் கவனிக்கும் அம்மா, அப்பா, நாகநாதனைத் தவிர மற்றவர்களைத் தம்மை நெருங்கவிடாமல் செய்யும் கொட்டாபுலிக் காளைகளைப் போல் வரலாறு படைத்த பல காளை மாடுகள் தமிழகத்தின் கிராமங்களை ஆட்சிசெய்துள்ளதை ஒவ்வொரு உழவனும் தங்கள் வாழ்க்கையை எழுதும் பொழுது இதுவரை தமிழுக்குக் கிடைக்காத கதைக்கருக்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். தம் குடும்பத்தினருடன் வண்டிமாடுகளை இணைத்துப் புகைப்படம் எடுப்பதையும், மாடுகளின் அருகில் நின்று புகைப்படும் எடுப்பது, வண்டியோட்டுவதுபோல் புகைப்படம் எடுப்பது தமிழகத்து உழவர்களின் விருப்பமாகும்.

கொள்ளிவாய்ப் பிசாசுகள் என்ற கதையில் கிராமங்களில் காலம் காலமாக நம்பப்படும் கொள்ளிவாய்ப் பிசாசுக் கதையைச் சொல்லி தம் அண்ணன் இந்திரஜித் மூலமாகப் பயம் தெளிந்த தம் அனுபவத்தை எழுதியுள்ளார்.

நாவற்பழம் சிறுகதையில் பள்ளி நிகழ்வுகள் பேசப்படுகின்றன. மாரியப்ப கண்டியர் வீட்டின் நாவல்பழம் திருடித் தின்னும் நிகழ்வு தத்ரூபமாக காட்டப்பட்டுள்ளது. இரவி, உப்பிலி, இராதா மூவரும் நாவல் மரத்தில் ஏறி நாவல் பழம் பறிப்பதும் இந்தக் கூட்டுக்கொள்ளையில் பங்கேற்காத இளஞ்செழியன் இரவியின் அப்பாவிடம் பற்றவைப்பதும், அப்பாவின் தண்டனையும் இந்தச் சிறுகதையைச் சுவையுடையதாக்குகின்றது. அன்று அப்பாவிடம் வாங்கிய அடிதான் முதலும் முடிவும் என்று கதையை இரவி முடித்துள்ளார்.

பொங்கல் என்ற தலைப்பில் இரவிச்சந்திரன் எழுதியுள்ள எழுத்துரையில் கிராமங்கள் எவ்வாறு தம் பாரம்பரிய இயல்புகளை இழந்து, தனித்தன்மை கெட்டு மாற்றங்களைச் சந்தித்து வருகின்றன என்பதைப் பதிவு செய்துள்ளார். பொங்கல் திருவிழா உறவினர்கள் ஒன்றுகூடி நடத்தும் பெருவிழாவாக நடைபெற்று மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்த நிலை மாறிக் கிராமங்களில் பிரிவுகள் உண்டாகி, மனக் கசப்புகளால் பிரிந்து கிடக்கும் நிலையை எடுத்துரைத்துள்ளார். வழிபாட்டு முறைகள், உறவினரின் ஒன்றுகூடல், சிற்றூர்ப்புறப் பழக்க வழக்கங்கள், கிராமப்புற விளையாட்டுகள், சிற்றூர் வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், சடங்குகள், வேளாண்மை, பொழுதுபோக்கு உள்ளிட்ட நிகழ்வுகளை அடுத்த தலைமுறைக்கு

நினைவூட்டும் எழுத்துரைகளாக இரவியின் எழுத்துரைகள் உள்ளன. ஒற்றுமையுடன் வாழ்ந்த கிராமத்து மக்கள் சண்டை சச்சரவுகளால் போலிஸ், கோர்ட்டுக்குச் செல்லும் நிலையில் உள்ளதைக் கவலையுடன் பதிவுசெய்துள்ள இரவியின் ஆதங்கம் ஒவ்வொரு எழுத்திலும் பதிவாகியுள்ளது.

களவாணி திரைப்படம், குற்றப்பரம்பரை புதினம் குறித்த மதிப்பீடுகளையும் எழுதி யுள்ளார்.

அப்பா என்னும் தலைப்பில் எழுபது வயதுவரை வாழ்ந்து, இயற்கை எய்திய தம் தந்தையின் குணநலன்களை இரவி வரலாறாக்கியுள்ளார். ஒவ்வொரு மகனும் தந்தையின் வரலாற்றை எழுதும்பொழுது தமிழகப் பண்பாட்டு வரலாறு முழுமையடையும். அன்பின் வடிவமாகவும், பாசத்தின் உருவமாகவும் விளங்கிய தம் தந்தை சோமு ஆலம்பிரியர் குழந்தைகள் மீது அளவுகடந்த பாசம் கொண்டவர் என்பதைப் பல சான்றுகள் காட்டி விளக்குகின்றார். உழைப்பால் உயர்ந்த தன் தந்தை வெட்டிக்காட்டு மக்களும் சுற்றுவட்டார மக்களும் போற்றும்படியாக வாழ்ந்தவர் என்பதை ஒவ்வொரு கருத்துகளாக அடுக்கிக்காட்டி ஒரு சித்திரமாக நமக்கு வரைந்து காட்டுகின்றார். அப்பா பிள்ளைகளைப் படிக்க வைத்த பாங்கு, கூத்துக்கலையில் அவருக்கு இருந்த ஈடுபாட்டைக் காட்டி, சிலநாளில் குடிப்பது உண்டு என்று பதிவு செய்து நடுநிலையாளராக இரவி நமக்குக் காட்சி தருகின்றார்.

சோமு ஆலம்பிரியார் நேர்மையாளர்; வணிகத்தை உயர்வாகப் போற்றியவர்; தொழில் தர்மம் கடைப்பிடித்தவர்; நம்பிக்கைக்குப் பெயர் பெற்றவர்; தம் பிள்ளைகளின் படிப்பு, பணிக்காக வீட்டிலிருந்த நகைகளை விற்றாலும் உழைத்து வாங்கிய நிலங்களை விற்க மறுத்தவர். தந்தை 69 ஆம் வயதில் இயற்கை எய்திய நேரத்தில் இரவியின் செமஸ்டர் தேர்வு தொடங்கியதால் அப்பாவின் இறப்புச் செய்தியைப் பத்துநாள் கழித்துதான் தெரிந்துகொண்டார்." அமெரிக்கக் குடியுரிமை பெற்று இன்று நல்ல வேலையில் ஓரளவு வசதியான வாழ்க்கை. ஆனால் பார்க்கத்தான் அப்பா இல்லை!"(பக்கம் 124) என்று முடித்துள்ளமை நம் கண்ணில் கண்ணீர் வரச்செய்கின்றது.

தேடுகிறேன் என்ற தலைப்பில் பிறந்து வாழ்ந்த வெட்டிக்காடு கிராமத்தில் இருந்த மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, தொழில் யாவும் மாற்றமடைந்து புதிய தலைமுறை உருவாகிவிட்டதை வருத்தத்துடன் பதிவு செய்துள்ளார். உழவுமாடுகள், நடவு, அறுவடை, கதிரடிக்கும் காட்சிகள், ஏற்றம், முச்சந்தி உரையாடல், கோயில் திருவிழாக்கள், கூத்துகள், சிற்றூர் விளையாட்டுகள், உடையலங்காரம் யாவும் மறைந்து வெட்டிக்காடு புதிய வடிவம் பெற்றுள்ளதைக் கண்டு, தாம் ஓடி விளையாண்ட கிராமம் எங்கே என்று கேட்கும் ஒரு கேள்வியில் நூறாண்டு மாற்றம் அடங்கியுள்ளதை உணரலாம்.

நூலில் உள்ள எழுத்துப் பிழைகள் சரிசெய்யப்பட வேண்டும்.

சுய புனைவாகத் தெரியும் வெட்டிக்காடு நூல், தன் வரலாறாகவும், குடும்ப வரலாறாகவும், ஊர் வரலாறாகவும் தமிழர் பண்பாட்டு வரலாறாகவும் உயர்ந்து நிற்கின்றது.

குறிப்பு; வெட்டிக்காடு நூல் 18.12.2016 மாலை தஞ்சையில் வெளியிடப்பட்டது.

நூல்: வெட்டிக்காடு
ஆசிரியர்: இரவிச்சந்திரன்
பக்கம்: 128, விலை: 150 INR


கிடைக்குமிடம்:
சோ. இரவிச்சந்திரன்,
14 ஏ, புளோரா சாலை,
# 0802அளாளியா பார்க்,
சிங்கப்பூர் 509 731
மின்னஞ்சல்: vssravi@gmail.com

இணையத்தில் வாங்குவதற்கு!

http://www.noolulagam.com/product/?pid=33232

# ஞாயிறு மறையும் முன்

— கௌசி



தன்னுடைய நண்பன் நிரோஜன் திருநாவுக்கரசினுடைய பாடலைக் கேட்டவுடன் கணனியைத் திறந்தான், சுதன். உள்ளத்தின் கட்டளைக்குக் கட்டுப்பட்டான்.

எனக்குள் உறைந்த என்னுயிரே!

உன் தைரியத்திற்கு இம்மடல் பாடம் நடத்துகின்றது. பல்கலைக்கழகத்தில் நீ கற்கும் பாடங்கள் மனதின் பண்புகளை உனக்குக் கற்றுத்தரும் பாடங்களாய் இருக்க முடியாது. ஏக்கம் கொண்ட மனம் நீண்ட காலம் தாக்குப் பிடிப்பதில்லை. பால் கெட்டால் திரைந்துவிடும். நெய் கெட்டால் வயிற்றைப் பிரட்டும். நட்புக்கெட்டால் எல்லாமே தலைகீழாகிவிடும். பேயோடு பழகினும் பிரிவதரிதே. உன்னோடு பழகிய நான் உன்னைப் பிரிவது எப்படி? என் விழிகள் உன்னையே அதிகம் படம் பிடித்துள்ளன. ஏனெனில், நேரிலும் நிழற்படத்திலும் உன்னைத்தானே என் கருமணிகள் அதிகம் நேசிக்கின்றன. அதனால், ஏக்கத்தில் கூட என் கண்கள் கண்ணீரைச் சேகரித்ததில்லை. ஏனெனில் நீ நனைந்து குளிரடைவதை அவை விரும்பியதில்லை!

ஒன்று சேர்ந்த அன்பு எங்களது. பாகப்பிரிவினை அதற்கில்லை. என்னோடு நீயிருக்கும் பொழுதுகள் உன் பெற்றோர் மற்றோர் உன் நினைவை விட்டு மறைந்த பொழுதுகள். மாற்றானை நீ மணம் முடிக்க என் மூச்சுக் காற்றே முன் நின்று உன்னைத் தடுத்துவிடும் என்பதை அறியாதவன் நான் இல்லை. நீ கணனிக்குள் அகப்பட்ட கவிதை அல்ல. என் மனதுக்குள் எழுதப்பட்ட கவிதை.

பல்கலைக்கழகத்தில் நீ கற்று பதவி வகித்துப் பெறும் பலனை விடப் பல மடங்கு உன்னை என் இதயத்திலும் செல்வாக்கிலும் உயரத்தில் வைத்திருக்க முடியும். அந்தஸ்தில் குறைந்தவன் நான் இல்லை. சாதியில் சரிந்தவன், நானில்லை. உன்னை

விட என்னால் கல்வியால் உயர முடியவில்லை. ஆனால், உன்னை விட என்னால் உழைப்பால் உயர முடியும். உன்னையும் என்னையும் இணைத்த அந்தக் காதலுக்குத் தடையென்ன வென்று என் மூளைக் கெட்டியவரை அறிய முடியாதவனாய் உள்ளேன்.

**"நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்!
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோ ரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்!
பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்!
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க."**

-

என்று சென்ற நூற்றாண்டில் பாரதிதாசன் புலம்பியும் இந்த நூற்றாண்டும் தொடர்கிறது காதலுக்கு சிவப்புக்கொடி. காதலுக்காகக் காதலர்கள் உயிர் துறந்த கதை கேள்விப்பட்டிருக்கின்றேன். எந்தப் பெற்றோராவது இறந்து விடுவோம்...! இறந்து விடுவோம்...!! என்று நச்சரித்ததைத் தவிர, எங்காவது இறந்த செய்தி கேள்விப்பட்டிருக்கின்றாயா?

நேம்புபவனுக்கு எல்லாம் கைகூடும்" என்று பைபிள் கூறுகின்றது. "நம்பிக்கை தான் நிஜங்களை உருவாக்குகிறது" என்று வில்லியம் ஜேம்ஸ் கூறியுள்ளார். பிரியமுள்ள பெற்றோர் உன் பிரிவைத் தாங்கார். பொறுத்தது பொன்னான நேரம். போதும் உன் அமைதி. நம்பிக்கையில் நாள் குறிப்போம். வருடங்கள் பல கடந்தும் வாழுகின்ற எம் காதல், வதுவை காணாது முடிவுறாது. நான் உரைத்த வார்த்தைகள் எல்லாம் நானாய் உரைத்தவை அன்று. எனக்குள் இருக்கும் நீயுரைக்கும் வார்த்தை என்பதை உணர்வாய்.

**திங்கள் பெண்ணாள் செவ்வாய் மலர்ந்து
புதனன்று சந்திக்க வருஞ்செய்தி சொல்லாயோ?
பூத்திருக்கும் புதுமலர் புனைந்தெடுத்து மாலையாக்கி
மங்கலநாண் மகிழ்ந்தேத்த, வியாழனன்று நாள் குறித்து
வெள்ளிக்கொலுசிட்டு வதுவைவினை முடித்து
சனியன்று சடங்கு வைக்கும் செய்தி சொல்ல
ஞாயிறு மறையுமுன் வந்துவிட மாட்டாயோ
நாமிணையும் நற்செய்தி நம்பெற்றோர் செவிநுழைய.
உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இவன்
சித்திரத்து ரோஜாவைச் சிறைப்பிடித்த
உன் இதயக் காவலன்.**



கணனி மூலம் அக்கடிதம் அவள் கண்களுக்குச் சமர்ப்பணம் ஆகியதும் நிம்மதிப் பெருமூச்சுடன் காதல் தேவதைக்கு உள்ளத்து நன்றியைப் புன்சிரிப்புடன் உதிர்த்துவிட்டபடி படுக்கையில் சாய்ந்தான், சுதன்.

குறிப்பு: பெற்றோர்களே! பூக்கள் மலரவேண்டும். மொட்டோடு கருகிவிடத் தீப்பந்தமாகாதீர்கள்.

# தொலைந்து போன மகிழ்வுகள் ...



கவிதாயினி அமுதா பொற்கொடி

காலச்சக்கரம் சுழன்று கொண்டே செல்கிறது... நாம் வரமறுத்தாலும் நம்மை உடன் இட்டுச்செல்கிறது... 50 அகவை எட்டப்போகிறேன்... அறியும் வயது முதல் அறிவையாய் வளர்ந்து கடந்து வந்த பாதைகளை திரும்பிப்பார்க்கிறேன்... எத்தனை அசூர வேக முன்னேற்றங்கள் என் வளர்ச்சி என்னையே பிரம்மிக்க வைக்கிறது.

சென்னை வண்ணையம்பதியில்தான் என் வாழ்க்கை துவக்கம் இரண்டே அறை உள்ள சிறிய 85 ரூபாய் வாடகை வீடு, அப்பா அம்மா இருவரும் ஆசிரியர்.. அப்பா ஒரு சைக்கிளுக்கு மட்டுமே சொந்தக்காரர்.... அருகில் உள்ள ஆரம்பப் பள்ளியில்தான் ஆரம்பமானது என் கல்விப் பயணம்........

இன்று மாளிகைப் போன்று வீடு, சொகுசு வாகன வசதிகள் அனைத்து செல்வங்களும் குறையரப் பெற்றுவிட்டேன்.... ஆனால் மகிழ்வை மட்டும் எங்கோ தொலைத்து விட்டேன்...

பரபரப்பான வீட்டு வேலைகளுடன் அம்மா தரும் சிற்றுண்டி..... உண்ணும் போதே வானொலிப்பெட்டியில் கேட்கும் தேனிசை.... பள்ளிக்கு நேரமாகிறது என எச்சரிக்கும் அம்மாவின் அதட்டல் குரல்.... இரவே கழுவி காயவைத்த கரும் பலகை காக்கிப்பையுடன் பள்ளி விரைவது.. அன்பு சகோதரன் கலைவாணனின் கரம் பற்றிக்கொண்டே.......

அப்போது என்னை பொறுத்தவரையில் உலகிலேயே மிகப்பெரிய அறிவாளி என் தந்தை..... உலகிலேயே மிகப்பெரிய அழகி என் தாய்..... உலகிலேயே மிகப்பெரிய பலசாலி என் அண்ணன் (ஏனென்றால் என்னிடம் வம்புக்கு வருபவர்களை துரத்தி துரத்தி அடிப்பான்) உலகிலேயே மிக சுறுசுறுப்பானவன் என் தம்பி... உலகிலேயே மிகப்பெரிய பாக்கியசாலி நான்தான்.... ஆனந்தம் பொங்கும் பூஞ்சோலை என் வீடு.

மாலை நேரங்களை அம்மாவிடம் 5 காசு வாங்கி மூச்சி இறைக்க தெருவில் ஓடி வாங்கும் கடிகார சவ்வு மிட்டாய்.... ஞாயிறு தோறும் வரும் ராட்டினம்... 3 சக்கர வாகனத்தில் வரும் நடமாடும் திரையரங்கம்.... பெரியப்பா, அப்பா, சித்தப்பா கொடுக்கும் சில்லறைகள் வைத்து வாங்கும் விளையாட்டு பொம்மைகள்..... அந்த நாட்களில் எனக்கு பெரும் பொக்கிஷங்கள்.

இரவு நேரங்களில் மட்டுமே அனைவரும் ஒன்றாய் அமர்ந்து உண்ணுவோம் அம்மா எப்பொழுதுமே பரபரப்பான வேலையில்...

அப்பா அவர்களின் சிறு பிராய அனுபவங்களையும் ராமாயணம் மகாபாரதக் கதைகளையும் எடுத்து கூறுவார்... நான் உண்ணாமல் அமர்ந்திருந்தால என் தட்டில் உள்ள சாதத்தை சிறு சிறு கவளமாக உருட்டி ஒவ்வொன்றுக்கும் தர்மர், பீமன், அர்ஜுனன் என வரிசையாக மகாபாரதத்திலுள்ள கதாபாத்திரங்களின் பெயர்களை சூட்டி எனக்கு ஊட்டிடுவார். அண்ணன் தான் நூலகத்தில் படித்த மாவீரன் நெப்போலியன், மங்கோலிய வீரன் ஜெங்கீஷ்கான். ஹிட்லர். அலெக்ஸ்சாண்டர், அரிஸ்டாட்டில் ஆகியோரைப்பற்றி தான் படித்ததில் கவர்ந்த பகுதிகளை எங்களுடன் பகிர்ந்து கொள்வான்.

அம்மா பள்ளிப்பருவத்திலேயே பெரிய பேச்சாளர். தமிழ் வளர்த்த ஆறுமுக நாவலர் கையால் பரிசு பெற்றவர். அவர் பேச்சு திறமையால் சேிம்மக்குரலோள்யு என்று பட்டம் பெற்றவர். என் சகோதரர்கள் இருவருமே நல்ல பேச்சாளர்கள். அப்பா எழுதிக்கொடுப்பார்... அம்மா பயிற்சி அளிப்பார், எப்போது அவர்களே முதல் பரிசு வெல்வர். இருவருமே மாநில அளவில் தங்கப் பதக்கம் வென்றவர்கள்.

எங்கள் வீட்டை பொறுத்தவரை நானே சர்வாதிகார மகாராணி. என்னை எவரும் படிக்கவும் சொன்னதில்லை படியவும் சொன்னதில்லை. அப்பா இல்லாத நேரங்களில் சகோதரர்கள் செய்யும் குறும்புகளை பட்டியலிட்டு மெருகேற்றி அவர் வந்த உடன் அப்படியே அதை வைத்து எழுதுவதுதான் என் தலையாய கடமை. அதனால் என் சகோதரர்களிடம் அடிக்கடி சண்டை வரும் அண்ணன் ஒரு நாளைக்கு ஒரு வக்கப் பெயர் வைத்து அழைப்பான். தம்பி இசைவாணன் சூர்ப்பனகை, இடும்பி, அசமுகி என புராண இதிகாசங்களில் வரும் அத்தனை ராட்சசிகளின் பெயர்களையும் வைத்து அழைப்பான். அவர்கள் வாயால் வசை வாங்குவதில் எனக்கு ஒரு அலாதி இன்பம்..

எத்தனை எத்தனை இன்பங்கள் அந்த சின்னஞ்சிறு கூட்டுக்குள்... ஆண்டுகள் பல கடந்து விட்டன வாழ்க்கைப் பாதையில் பல காத தூரம் கடந்து விட்டேன்..... ஆனால் மனமோ இன்றும் சிட்டாய் பறக்கிறது அந்த சின்னஞ்சிறிய கூட்டைத் தேடி........




பல்சுவை
தமிழ்நெஞ்சம்
பெப்ரவரி 2017

# அழகு

நீ பேரழகு என்கிறார்கள்
ஆண்களை விட உன்னை
அதிகமாக நேசிப்பது பெண்களே
நீ இருக்கும் இடமோ
அழகிய பூஞ்சோலை
நீயோ பல
வண்ணங்களுக்கு சொந்தக்காரி
உன்னை தொட துடிக்கிறது
என் விரல்கள் .

ஒரு வித பயம் என்னுள்
உன்னை சுற்றி இருக்கும்
அந்த முட்கள் என்
விரல்களை பதம் பார்த்து
விடுமோ என்ற பயத்திலும்
தொடுகிறேன்!



கணேசம்மா சந்திரன் / மலேசியா